# திராவிடநாடு

18–3–63 | வார வெளியீடு | விலை 16 காசு


## “நாளை வெற்றி நமதே!”

—சி. இராமசாமி—

எதிர்நின்று போராடி, இயலாச் சீனன்
இனிமேலும் வீரத்தால் ஆகா தென்று
சதிசெய்யக் காலத்தை நீட்டிக் கின்றான்!
சமரசத்தை வாய்ப்பேச்சில் காட்டுகின்றான்
மிதிபட்ட நச்சரவு சீனப் பாம்பு!
மீண்டுயர்ந்து வாய்த்திறக்கும்! அதனைத் தாக்கு
பதிலுரைக்க நாம்தயங்கோம்! எனினும் இன்னும்
படைசேர்ப்போம்; பொருள்சேர்ப்போம்; பகையை வெல்வோம்!

உலைக்களத்தில் படைக்கலங்கள் உருவா கட்டும்!
உதிரிகளின் பிணங்கள்இனி எருவா கட்டும்!
மலைமலையாய் நமதுபடை முன்னே றட்டும்!
மமதைகொண்ட சீனர்இனிப் பின்வாங் கட்டும்!
தலைகனத்தார் செங்குருதி தெறித்தோ டட்டும்!
தறுகண்மிகு நம்வீரம் பயிரா கட்டும்!
புலவர்களின் நாவெல்லாம் அறம்பா டட்டும்!
பொலிவுடனே நாளைவெற்றி நமதா கட்டும்!

# தியாகச் சின்னம்

வானத்தின் அழுகை வெறும் கண்ணீர்த் துளிகளாக, தூறலாக அன்று முழுவதும் அமைந்திருந்தது. இரவு பத்து மணியிருக்கும். அப்பொழுதுதான் அழுகையை நிறுத்தி விட்ட வானம், துயரத்தின் உருவாய்க் காட்சி தந்துகொண்டிருந்தது. வானத்தையே நோக்கிக் கொண்டிருந்த சந்திரனது எண்ணமும் அழுகையை நிறுத்திவிட்டுத் துயர உருக்கொண்டு அமைதியாக இருந்தாலும், குளிர் காற்று மூலம் தன் துயரச்சுமையினளவை வானம் வெளிப்படுத்துவது போன்று, சந்திரன் பெருமூச்சு விட்டுக்கொண்டு அமர்ந்திருந்தான்.

சிறிது நேரத்துக்கு முன்தான் ஊரிலிருந்து திரும்பி வந்திருந்த பக்கத்து வீட்டுப் பரந்தாம முதலியார், தமது பழைய வீட்டைப் பழுதுபார்க்க வேண்டிய திட்டத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டுச் சென்றிருந்தார். சென்னையில் அவருக்குப் பெரிய பங்களா சொந்தத்திலிருக்கின்றது. ஆனாலும் அவருக்கு இந்த வீட்டைத் துறக்கும் எண்ணமே இல்லை. பழுது பார்த்துப் பழைய அமைப்பிலேயே இந்த வீட்டைப் பாதுகாத்து வரவேண்டும்;இதுதான் என் ஆசை என்று அவர் கூறிவிட்டுச் சென்ற சொற்கள், சந்திரனின் நினைவுதனில் சுழன்றுகொண்டிருந்தன.

உள்ளேயிருந்து வந்த உமா பெட்டியிலிருந்து எடுத்து வந்த வெள்ளிச் செம்பைச் சுத்தப்படுத்திக் காண்பிக்க வந்தாள். "தங்களது நண்பர் நாளை வருவதாகக் கூறினீர்களே, அவருக்கு இச்செம்பில்தான் பால் தந்து உபசரிக்கவேண்டும் என எண்ணுகின்றேன்" என்று அச்செம்பைக் காண்பித்தாள். சந்திரன் விழிகளிலிருந்து வழிந்த கண்ணீரை உமாவின் பார்வையிலிருந்து மறைத்துவிட முடியவில்லை. அதிர்ச்சியுற்றவளானாள்–தன் கணவனின் கண்ணீரைக் கண்டு. ஆறுதலான இதயத்துடன் கணவனது தோள்களில் தன் முகத்தை வைத்து, "ஏனத்தான் அழுகிறீர்கள்? தவறாக ஏதும் நான் கூறிவிட்டேனா? மன்னித்துக் கொள்ளுங்கள்" என வழிந்தோடும் கண்ணீரைத் தன் முந்தானையால் துடைத்தாள். "உமா" என மூச்சடைக்கும் குரலில் தேம்பினான்

**மதிஒளி**

சந்திரன். மனைவியின் அணைப்பிலே முகத்தைப் புதைத்துக்கொண்டு, அழுதுகொண்டிருந்தான்.

"என்ன, அத்தான், இது? என்ன நடந்துவிட்டது? இதோ, என்னைப் பாருங்கள். ஏன் அழுகிறீர்கள்?" என்று தேறுதல் கூறினாளே தவிர, உமாவும் கணவனின் கண்ணீரைக் கண்டு, தானும் கண்ணீர் விடாமலில்லை.

"என்னைத் தனியே விட்டுவிடு உமா. நீ போய்விடு" என்று சந்திரன் கூறவே, தனியே விட்டுவிட்டு உள்ளே சென்றாள் உமா.

வாழ்வின் சுவையைத் தாங்கிய போதெல்லாம் மனங் கலங்காது, தன் கண்ணீரைத் துடைத்து அணைத்த கணவன், இன்று கண்ணீர் விட்டுக் கலங்குவதையும், துயரத்திற்குக் காரணம் கூறாமல் அழுவதையும் கண்டு உமாவின் இதயம் வெடித்துவிடும் போலிருந்தது.

நேரம் சென்றுகொண்டேயிருந்தது. சந்திரன் உட்கார்ந்தது உட்கார்ந்தபடியே யிருந்தான். கடைசியில்தானே சென்று, அழைத்துக் கொண்டு வந்து படுத்துத் தூங்கும்படி வற்புறுத்தினாள் உமா. உமாவின் ஒரு கரம் சந்திரனின் தலையை வருடிக் கொண்டிருந்தது. மற்றொரு கை அவனது முகத்தைத் தனது முகத்தருகே திருப்பியது. அவனை விழிகளால் பருகிக்கொண்டே "என்ன அத்தான், என்னிடம் கூறுங்கள். நான் உங்களது அன்புக் கரசியல்லவா? கூறுங்கள் அத்தான். என் மனம் தங்களது நிலைகண்டு எரிதழலின் புழுவாகத் துடிக்கின்றது" என்று வேண்டினாள். எதையும்கூற மறுத்துவிட்டான் சந்திரன். "தூங்குங்கள் அத்தான்" என ஆறுதலாக அவனை அணைத்துக் கொண்டு உறங்க ஆரம்பித்தாள். உறங்குவதுபோல் சந்திரன் கண்களை மூடிக்கொண்டான். மனத்திலே பெரியதொரு போர் நடக்கும் போது உறக்கம் எங்கே வரும்?

இருபது ஆண்டுகட்கு முந்திய எண்ணம் பின்னோக்கி ஓடியது.

உமாவின் முகம் நோக்கினான் சந்திரன. உமாவின் முகத்தில் ஏதோ இன்பக்கனவு கண்டு இளநகை பூத்துக்கொண்டிருந்தது. நீள ஓடி

(4-ம் பக்கம் பார்க்க)

# வரிச் சுமை!

மலர் 21 ] ஆண்டு சந்தா ரூ. 8 (17—3—1963) தனிப்பிரதி 16-காசு [ இதழ் 29.

மத்திய அரசு இப்போது பொதுமக்கள்மீது சுமத்தியிருக்கும் புதுவரிகளைக் கண்டிக்காதார் இல்லை என்றே கூறலாம்.

ஆளுங் கட்சியைச் சார்ந்த காங்கிரசுக்காரர்கள் பலர் உட்பட எல்லாக் கட்சியினருமே இந்த வரிச்சுமை நியாயமற்ற முறையில் பொதுமக்கள்மீது ஏற்றப்பட்டிருக்கிறதென்பதை எடுத்துக்கூறத் தயங்கவில்லை.

நாட்டின் நெருக்கடியை முன்னிட்டு அரசாங்கத்திற்கு அதிக பணம் தேவை என்பதை உணர்கிறோம்—ஒப்புக்கொள்கிறோம்.

ஆனால், அதிக பணம் எங்தெந்த வகையில் யாரராரிடமிருந்து வசூலிக்கப்படவேண்டுமென்பதை அரசு யோசித்திருக்க வேண்டும். நிதிமந்திரி அவர்கள் இந்தத் துறையில் அதிக கவனம் செலுத்தவில்லையென்று தெரிகிறது.

பொதுமக்களிலும், ஏழை எளிய மக்களை அதிக அளவில் பாதிக்கக்கூடிய மண்ணெண்ணெய் வரி, கட்டாயச் சேமிப்பு முறையின் மூலம் அரசாங்கம் தனது தேவைகளைப் பூர்த்தி செய்ய முயன்றிருப்பது உண்மையிலேயே வருந்தத்தக்க தாகும்.

நிதி மந்திரி அவர்களின் வரிவிதிப்பு முறையைக் கண்டித்து 9—3—63-ல் 'சுதேசமித்திரன்' ஏடு ஒரு தலையங்கம் தீட்டியுள்ளது. 'தர்க்கமல்ல குதர்க்கமே' என்பது அதன் தலைப்பு. அதன் ஒரு பகுதியை இங்கு தருகிறோம்.

> "………வெந்த புண்ணிலே வேலிடுவதற்குச் சமமானதுதான்; கட்டாயச் சேமிப்புப் பற்றிய அவருடைய வாதமும். விலைவாசி நிலவரம் சறுக்கு மரம் போல்தான் இருக்கிறது என்பதை அவரே ஒப்புக்கொள்கிறார். தேசிய வருமானம் கணிசமாக அதிகரிக்கவில்லை என்பதையும் ஏற்கிறார். இருந்த போதிலும் பரம ஏழைகள் தவிரப் பாக்கி அனைவரும் கட்டாயச் சேமிப்பு வலையில் கட்டுண்டேயாக வேண்டும் என்று அவர் அடம் பிடிக்கிறார். வருமானம் பெருகாமல் விலைவாசிகள் மட்டும்நாளுக்குநாள் ஏறிவரும் இன்றைய நிலையில் அந்தச் சேமிப்புக்கு எங்கே பணம் இருக்கிறது என்பதுதான் கேள்வி. வருங்காலத்தைப் பற்றிய அக்கறை அரசாங்கத்துக்கு மட்டும்தான் இருக்க முடியும் என்பதில்லை. தனி மனிதனுக்கும் அது நிறைந்த அளவில் உண்டு. ஒவ்வொருவனும் தன் குடும்பம் வசதியாக வாழும் பொருட்டு இயன்ற மட்டும் சேமிக்கத்தான் முற்படுவான். மனப்பூர்வமாக முற்பட்டாலும் அவனால் முடியவில்லை என்றால், அரசாங்கத்தின் இஷ்டபூர்வச் சேமிப்புத் திட்டங்கள் போதிய பலன் அளிக்கவில்லை என்றால், அது எதைக்குறிக்கிறது? — அவனுடைய அன்றாட வாழ்க்கைச் செலவுகளையே அவனால் சமாளிக்க முடியவில்லை என்பதைத்தானே?
>
> இவ்விதம் ஏற்கனவே கஷ்டப்படும் மக்கள் மீது கடுமையான வரிகளைப்போட்டுக் கட்டாயச் சேமிப்பையும் திணிக்ககூடாது என்று தப்பித்தவறிக் காங்கிரஸ் அங்கத்தினர்களிலேயே இரண்டொருவர் கூறினாலோ, பொல்லாத கோபம் வந்துவிடுகிறது மொரார்ஜிக்கு. கட்சிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களானாலும் அவர்களும் தம்மைப் போல மக்கள் பிரதிநிதிகளே, குறைகளை எடுத்துக் கூற அவர்களுக்கு உரிமை உண்டு என்பதை மறந்து, 'முதுகில் குத்துகின்றனர்' என்று சீறுகிறார்; கட்சியை விட்டுப் போகலாமே என்கிறார். தான் பிடித்தமுயலுக்கு மூன்றே கால் என்று சாதித்து, இவ்வாறு கட்சியை கலைக்கவா அவர் நிதி மந்திரியானார்? — காலதாமதமின்றிக் காங்கிரஸ் அங்கத்தினர்கள் கூடிப்பேசி, அவருடைய மனத்தை மாற்ற வழிதேட வேண்டும்; முக்கியமாக, மண்ணெண்ணெய் போன்ற அவசியப் பொருள்கள்மீது வரி, கட்டாயச் சேமிப்பு, தொழில்துறை முழுவதையும் தேக்கமடையச் செய்துவிட்ட உயர்லாப வரி ஆகியவற்றைப்பொறுத்து, திரு. மொரார்ஜியின் பிடிவாதத்தை அவர்கள் தளர்த்தியேயாக வேண்டும். அப்போதுதான் இந்த நெருக்கடி நேரத்தில் நாட்டுக்கு மக்களுக்கு மேலும் சோதனைகளைத்தவிர்த்து, அவர்களுடைய மனப்பூர்வ ஆதரவைத் திரட்டும் நற்பணியைப் புரிந்தவராவர் அவர்கள்."

என்று எழுதுவதன் வாயிலாக மத்திய அரசின் வரி விதிப்பு முறையைக் கண்டித்திருப்பதை நாமும் இங்கு எடுத்துக்காட்டி, ஏழை எளிய மக்கள் தாங்கமுடியாத வரியால் பெரிதும்அவதிக்குள்ளாவர் என்பதை அரசுக்கு நினைவூட்டுவதோடு, மக்களின் பிரதிநிதிகளாகச் சட்ட மன்றங்களில் அமர்ந்திருப்போர், அரசின் இந்த ஆகாத போக்கினை மாற்ற முன்வரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

யிருந்த அவளது விழிகள் மூடியிருந்தது, சங்குமூடியையொத்திருந்தது. உலகத்தில் எனக்கு வலிமை வாய்ந்த பாதுகாப்பு என் கணவர் என்பதையே உள்ளமாக்கிக் கொண்டு, முகத்திலே அவ்வெண்ணத்தின் உருவைக் காண்பித்துக் கொண்டிருக்கின்ற நிர்மலமான முகம். அவளது கை உரிமை மனைவி நான் என அவனது இடுப்பிலே கிடந்து அணைத்துக்கொண்டிருந்தது. அவனது மனம் அருகிருந்த உமாவை எண்ணுமல், வேருென்றை எண்ணிப் போராடிக் கொண்டிருந்தது.

காலம் தன்னுள் எத்தனையோ சரித்திரங்களை இரகசியமாக வைத்துக்கொண்டிருக்கின்றது. ஆனல், இரகசியச் சரித்திரத்துக்கு என்றுமே கூர்மை அதிகம். அதன் கூர்மை பட்டவுடனே, சரித்திரத்துக்குச் சொந்தக்காரர்கள் படுகின்ற வேதனை அதிகம்; அதிகம்.

மனத்திலெழுகின்ற எண்ணங்களை முழுமையான அளவுக்குச் சிந்திக்க வேண்டும். அரைகுறை நிலையில் விடப்பட்ட சிந்தனை, சில வேளைகளில், குண்டுபட்டுத் தப்பியோடிவிட்ட புலி போலாகிறது. முழுமையடையாமல் விட்ட சிந்தனை என்றேனும் ஒருநாள் மனிதனை வேதனைக்காளாக்குகின்றது.

எண்ண அலைகளை எழுப்பிவிடுகின்ற மனக் கடலுக்கு அறிவெனும் ஆராய்ச்சிக் கரை அவசியம் இருந்தேயாகவேண்டும். அலைகளின் முழக்கமும் பொங்குதலும் இருந்துகொண்டேயிருக்கும். அவை அதிகமாகிவிட்டாலோ ஆபத்துத்தான் வந்து தீரும். பற்றிவிட்ட நெருப்பு போல அறிவின் தொடர்பில்லா எண்ண அலைகள் பரவிப் பரவி, மனிதனைச் சுட்டுச் சாம்பலாக்கிவிடுகின்றன. இதைத்தான் மறந்துவிட்டான் சந்திரன். அதன் விளைவு தான் இன்று வேதனைப்படுகின்ருன்.

அன்று மாலை தற்செயலாகக் குணவதியைச் சந்தித்தான். இருபதாண்டுகட்குமுன் கண்ட அதே குணவதி! தன்னேடு வேலை செய்த போது இருந்த அதே சிரிப்பு! அதே கொஞ்சலான பேச்சு! அழுகை அழுகையாக வந்தது — அவள் கூறிய சில சொற்கள், அவனுக்கு! சந்திரன்! நீண்ட நாட்களின் பிரிவுக்குப் பிறகு தங்களைக் காண்பது என் பேறே என் இதயத்தில் தங்களது திருஉருவம் பதிந்துவிட்டது என்ருலும், நேரில் தங்களைக் காணும் இவ்வேளையை ஒரு பேருகவே கருதுகின்றேன். நீங்கள் என் கழுத்தை உற்றுப் பார்ப்பதுவும், முகத்திலே ஏன், என்ன எனும் வினுக்களை விடுப்பதுவும் நன்குணர்கிறேன். சந்தர்! எனக்குத் திருமணமாகிவிட்டது. ஆனல் திருமணச் சின்னமான மங்கலநாண் கழுத்திலே இல்லை! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். காலம் தன் முதுமை அணியை நம் மீது அணிவித்துவிட்டது. ஆம், சந்திரன், தங்களை என் துணைவராக என்னிதயத்தே ஏந்திக்கொண்ட பிறகு, திருமணம் நடந்துவிட்டது என நான் நவின்றது தவறல்ல என உணர்கிறேன்''— இவ்வார்த்தைகள் அவனது இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது!

தன் வீட்டுக்கு வரும்படி அழைப்பு விடுத்தான். முதலில் தயங்கிய குணவதி, அவனது கடுமுகத்தை நோக்கியவுடனே 'வருகின்றேன்' என்று ஒத்துக்கொண்டாள். "சந்திரன்! அதே முன்கோபம் தங்களிடத்துள்ளது. எதற்காக அன்று பயந்தேனே, இன்றும் அதற்கே பயப்படுகின்றேன். அந்தப் பயத்தினுலேயே தங்களது உரிமைப் பொருள் நான் வருகிறேன் என இணங்கியதாகும்'' எனக் கூறினுள்.

○

இருபதாண்டுகட்கு முன்னுல் சந்திரன் ஆரம்பப் பள்ளி ஆசிரியனுகப் பணியாற்றிக்கொண்டிருந்தான். குணவதி புதியதாய் அப்பள்ளிக்கு ஆசிரியையாக வந்தமர்ந்திருந்தாள். பணியாற்றிய இடம் சிற்றூராக இருந்ததால், அதே ஊரில் தங்காது, இருவரும் அருகிருந்த நகரத்திலிருந்தே நாள்தோறும் சென்று வந்தனர். மிக அண்மையில் நகரம் இருந்ததால் நடந்தே சென்று வந்தனர்.

இளமை வயது; மணமாகாத பருவம். பெண்மையும் நாணமும் குணவதியை அச்சம் மிகக்கொண்டவளாகவே பணியாற்றச் செய்தது. சந்திரன் ஆசிரியனுக மட்டுமே இல்லை. நிறையப் படிக்கின்ற பழக்கமுடையவன், அரசியல், கலை, இலக்கியம், மொழி, வரலாறு எல்லாவற்றையுமே நன்கு படித்தறியும் பேரார்வமுடையவன். நடந்துவரும் வழியில் தினம்தினம் ஏதாவது ஒரு தலைப்பில் குணவதியுடன் உரையாடுவான். அத்தி பூத்தாற்போல் குணவதி தன் கருத்துக்களை அவனிடம் கூறுவாளே தவிர, மற்ற வேளைகளில் அவன் விளக்கிக் கொண்டுவரும் கருத்துக்களில் தன் மனத்தை ஊன்றவைப்பாள். நாளடைவில் அவள் மனம் அவனது கருத்துக்களை விளக்குகின்ற அழகில் பதிய ஆரம்பித்தது. அது சந்திரனைப்பற்றிப்பெருமதிப்பு வைக்கக் காரணமாகியது. மிக்க மரியாதையுடன் பேசியும் பழகியும் நடந்த சந்திரனின் குணம் அவளைக் கவர்ந்தது.

சந்திரன் மிக எளிமையாகவே இருப்பான். ஆடம்பர உடைகளை அவன் தேவையற்ற ஒன்று என ஒதுக்கினுன். நல்ல சிந்தனையோட்டத்தை வேகப்படுத்துகின்ற நூல்களை வாங்குவதில் தன் பணத்தைச் செலவழித்தான். அலை அலையாய் எழுகின்ற எண்ணக் கோர்வைகளை, புதுமையான கருத்துக்களை எழுதுவான். மற்றவர்கட்குத் தன் கருத்துக்களைக் கூறும்போது, அவர்களின் கருத்துக்களையும் கேட்டுச் சிந்தனை செய்வான். இத்தகைய பண்புகள் குணவதியைக் கவர்ந்தன.

சந்திரன் தரும் நூல்களைப் படிக்க ஆரம்பித்தாள். அவன் அந்தந்த நூல்களில் கோடிட்டு வைத்துள்ள கருத்துக்களைப் படிக்கும்போது, தன்னையறியாது அவன்மீது அவளுள்ளம் நிலைகொள்வதைத் தன்னுல் தடுக்கும் ஆற்றலையிழந்து நின்ற தன் பலவீனத்தைக் கண்டு நாணுற்ருள். எனினும், அதற்காக அவள் வருத்தப்படவில்லை.

இந்நிலையில்தான் அந்த விளையாட்டு நிகழ்ச்சி நடந்தது. சில வேளைகளில் வேடிக்கையாக விளையாடிவிட்டுச் செல்பவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். ஆனல் மறுபாதி பங்கினர் வேதனையில் ஆழ்ந்துவிட வேண்டியுள்ளது.

"கண்ணு! நான் பணியாற்றுகின்றபள்ளியில்என்னுடன்குணவதி ஆசிரியையாகப் பணியாற்றுகின்ருள். மிக நல்லவள். அடக்கம் மிகக்கொண்டவள். அனைத்தும் அறிந்தவள் யானே என அகங்காரங் கொண்டு, அழகி யானே என அளவுக்கு மீறி அலங்காரம் செய்துகொண்டு, வீண் ஆடம்பரமும் வெற்று ஆரவாரமும்கொண்டு, அலைகின்ற சில பெண்களைப்போலன்றி,

( 13-ம் பக்கம் பார்க்க )

# செய்யாத குற்றம்

**கனகு**

சென்னையிலிருந்து கால்நடையாகவே விழுப்புரத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தான் இராகவன். என்றும் நெடுந்தொலைவு நடந்து பழக்கமில்லாத இராகவன், இரண்டு நாட்கள் நடந்து 25 கல் தொலைவுதான் வந்திருந்தான். வெயில் நன்றாகக் கொளுத்திக் கொண்டிருந்தது. முதல் நாளைவிட இன்று அதிகமாக அந்த வெயில் அவனை வாட்டி வதைத்தது. சாலையோரமிருந்த மரத்தடியில் நின்றுகொண்டு சுற்றுமுற்றும் எதையோ தேடுபவன்போல் உற்று நோக்கினான் அவன். சற்றுத் தொலைவில் பத்துப் பதினைந்து வேப்பமரக் கூட்டம் அவன் கண்ணுக்குத் தென்பட்டது. அந்த வெயில் வேளையில் தொலைவில் தென்பட்ட அந்த வேப்பங் குளிர்ச்சி அவனைக் கவர்ந்திழுத்தது. அந்த வேப்பமரக் கூட்டத்தை நோக்கி அவன் நடந்தான். அடடா, அந்த வெயில் வேளையில்தான் அந்த வேப்பங் குளிர்ச்சி எத்துணை இதமாயிருந்தது. அந்த இதம் இராகவனைத் தன் பசியைக்கூட மறந்து விட்டிருக்கச் செய்தது.

சிறிது நேரம் ஆயிற்று. கோட்டும், சூட்டும், ஹாட்டும், பூட்டும் அணிந்த ஒருவன் அங்கு வந்தான். அவன் தொலைவில் வரும்போதே அவனுடைய மிதியடியோசை இராகவன் காதில் விழுந்தது. இராகவன் நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

“ஏய், நீ யார்?”

இராகவனை நெருங்கியதும் வந்தவன் கேட்டான்.

இராகவன் பதில் சொல்லவில்லை. ‘இவன் புதிதாகச் சூட்டும், கோட்டும் போடத் துவங்கியிருக்கிறானே! அதனால்தான் இவன் நாகரிகத்தையும், மரியாதையையும் மறந்துவிட்டுப் பேசுகிறானே!’

வந்தவன் இராகவன் அருகில் நின்றபடி தன்னுடைய குளிர்ச்சிக் கண்ணாடியை ஒருமுறை தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

“என்ன, நான் கேக்கறான்;—நீ பதில் ஒண்ணும் பேசாமே சும்மாங் காட்டியும் குந்திக்கினு கீறியே?”

‘ஓகோ, இவன் உடையை மட்டும் வெளிச்சமாகப் போட்டுக்கொண்டு திரியப் பழகினவனோ' பாவம்.’

“நான் ஒரு வழிப்போக்கன். இங்கே வெயிலுக்காக உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்.”

“வெயிலுக்கா இங்கே குந்திக்கினுகீறே! பலே தமாஷாங்காட்டியும் ஓம் பேச்சி! ரோட்லேந்து இம்மாந் தொலவு வந்தா வெயிலுக்குக் குந்திக்கணும்?”

இராகவன் பதில் சொல்லாமல் இருந்தான்.

“இந்த இடம் ரொம்ப மோசமான இடம். போக்கிரிங்க உலாவற இடம். ஸ்மக்ளிங்தெரியுமா ஒனக்கு—அதெல்லாம் நடக்கிற இடம். நீ என்னடாங்காட்டியின்னா, இங்கே வெயிலுக்குக் குந்திக்கினுகீறேன்னு சொல்லிக்கினு நிக்கிறே! ஒருவேளை நீகூட.........” அந்த ஆசாமியின் வார்த்தை இராகவனைத் தூக்கி வாரிப்போட்டது. ஸ்மக்ளிங் என்ற சொல்லைக் கேட்டதும் அவன் உடல் ஆடத் தொடங்கியது. சட்டென்று அவன் எழுந்து அவ்விடமிருந்து நகர முனைந்தான்.

“அடடே, பயந்துபூடாதே அண்ணாத்தே! இப்போ உனக்கு ஒரு ஆபத்தும் வராது! ஸ்மக்ளிங்காரனுங்களும், போக்கிரிங்களும் நம்ப மாதிரி ஆளுங்கதான். அவனுக நம்ப தலையைச் சீவிப்போட மாட்டானுக. நீ பயந்துக்காதே! ஒரு வாட்டி இங்கே குந்திக்கினு இருந்துட்டுப் போ!”

இராகவனை அந்த ஆள் கையைப் பிடித்து உட்கார வைத்தான்.

இராகவன் அங்கே கால்நடையாகக் கிளம்பிய சம்பவமே வினோதமானது. அவன் ஒரு சாதாரண கம்பெனியில் ஒரு சாமானிய கணக்கப்பிள்ளையாகப் பணியாற்றிக் கொண்டிருந்தான். ஒரு வாரத்துக்கு முன்னர் ஒரு நாள் அந்தக் கம்பெனி முதலாளி இராகவனைக் கூப்பிட்டார்.

“நீ ஒரு வேலை செய்யவேண்டும்” என்ற பீடிகையோடு பேசத் தொடங்கிய அவர் “நீ விழுப்புரம் வரை போய் வருகிறாயா? மாலை ஆறு மணிக்கு இங்கிருந்து கிளம்பிப்போய், இரவு பன்னிரண்டுமணிக்கெல்லாம் இங்கே திரும்பி வந்துவிடலாம். இரயிலில் போக வேண்டியதில்லை. நம்முடைய காரிலே போக வேண்டியது. காரிலேயே வர வேண்டியது. உன்னுடன் வேறு யாரும் வரமாட்டார்கள். நீயும் டிரைவரும்தான் போகவேண்டும். நீங்கள் இரண்டுபேருந்தான் திரும்பி வரவேண்டும்.”

முதலாளி என்ன சொல்கிறார் என்று இராகவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் சொல்வதற்குச் சரி என்பதா, முடியாது என்பதா

என்று அவனுக்குத் தோன்றவில்லை. அப்படியே மலைத்து நின்றான் அவன்.

அவன் மலைப்பதை ஒருமுறை நோட்டமிட்டு விட்டுத் திரும்பவும் முதலாளி பேசினார்.

"வேலை அப்படிப்பிரமாதமானதாக ஒன்றுமில்லை. நீ காரிலிருந்து இறங்கக்கூட வேண்டியிராது. சும்மா ஒரு துணைக்குப் போவதுபோல் காரில் போய்விட்டுக் காரில் வர வேண்டியதுதான். மற்றக் காரியங்களையெல்லாம் டிரைவர் பார்த்துக் கொள்வான். அங்கே விழுப்புரத்தில் உள்ள நம் ஆட்கள் செய்துவிடுவார்கள்.

இன்னும் இராகவனுக்குத் தன் முதலாளியின் வார்த்தை நன்ருகப் புரியவில்லை. 'என்ன வேலை, ஏன் போகவேண்டும்' என்று அவரிடம் கேட்பதற்கும் துணிச்சல் இல்லை. அவன் மௌனமாகவே நின்ருன்.

"என்ன நான் சொல்கிறது புரிகிறதா? போய் வருகிருயா?"

'சரி' என்று தலையாட்டிவிட்டுத் திரும்பி வந்தான் இராகவன்.

அன்று மாலை சரியாக ஆறு மணிக்கு முதலாளியின் கார் வந்து நின்றது. இராகவன் காரில் ஏறிக் கொண்டான். "பத்திரமாய்ப் போய் வாருங்கள். ஜாக்கிரதை!" என்று முதலாளி அறிவுரை கூறி அனுப்பினார். டிரைவர் தலையாட்டியதைப் போலவே 'ஆகட்டும்' என்று இராகவனும் தலையாட்டி வைத்தான்.

கார் விழுப்புரத்தை நோக்கி அந்த விசாலமான சாலையில் விரைந்தோடிக்கொண்டிருந்தது அன்று பகல் முழுதும் கொளுத்து கொளுத்தென்று கொளுத்திக் கொண்டிருந்த வெயிலால் ஏறபட்ட புழுக்கத்தை மட்டுமல்ல, இராகவன் தன்னையே அந்த வேளை மறந்துபோனான். அப்படியொரு பரவச நிலையை உண்டாக்கிக் கொண்டிருந்தது காரின் வேகத்தை யொட்டிக் காருக்குள் குபுகுபு என்று வந்து புகுந்துகொண்டிருந்த குளிரிளங் காற்று. இந்த மாதிரி குளிரிளங் காற்று வந்து தன் மீது மோதிப் பரவச நிலையில் ஆழ்த்த அவன் அதுவரை அப்படிக் காரில் பிரயாணம் செய்து பழக்கமே இல்லை. அநேக முறை அவன் பஸ்ஸில் பிரயாணம் செய்திருக்கிருன். அந்த வேளைகளில் எல்லாம் பஸ்ஸை எதிர்த்துக்கொண்டு வீசும் பெருங் காற்றைத்தான் அவன் கண்டிருக்கிருன். அந்தக் காற்று முகத்தில் அறைந்தாற்போல் மிக வேகமாக, ஓயாமல் வீசுவதையும், நன்ருக வாரி விடப்பட்டுள்ள கிராப்பைஅடியோடு கலைத்துவிடுவதையும், மேல் துண்டை அடிக்கொரு முறை கீழே தள்ளிப் பேரலைக் கழிப்புப் புரிவதையும்தான் அவன் அதுவரை அனுபவித்துச் சள்ளைப் பட்டிருக்கிருன். எனவே, அவனுக்கு இந்தக் கார் சவாரி ஒரு புதிய உல்லாச அனுபவம். அந்த உல்லாச அனுபவதில் அவன் தன்னை மறந்து இலயித்துக் கிடந்தான். அந்த இலயிப்பு, காரில் ஏறியவுடனேயே டிரைவரிடம் கேட்டு அந்தப் பிரயாணம் பற்றிய எல்லா விவரத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று அவன் எண்ணியிருந்ததை மறக்கடித்துவிட்டது. அவன் தன்பாட்டில், தானே அந்தக் காருக்குச் சொந்தக்காரன் என்னும் அளவுக்கு விரிந்துவிட்டதொரு வெற்றுப் பெருமிதத்தில் மிதந்து கொண்டிருந்தான்.

"விழுப்புரம் வந்துவிட்டது" என்று டிரைவர் உரத்த குரலில் கூறினான். அதே வேளை காரும் நின்றது. அப்போதுதான் தன்னைப் பற்றிய நினைவுக்கு இராகவன் இறங்கி வந்தான். சுற்று முற்றும் பார்த்தான். அந்த இடம் சந்தடியற்றுக் கிடந்தது. ஆனால், சற்றுத் தொலைவில் இரண்டொரு கடைகளிலிருந்து வெளிச்சம் தெரிந்தது. ஆட் புழக்கம் தென்பட்டது. பேச்சுக் குரல் கேட்டது. அந்தக் கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்தருகே வெளிச்சம் இல்லை. அது ஒரு விளக்குக் கம்பத் தடியில் தான் நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால், அந்தக் கம்பத்திலிருந்த விளக்கு எரியவில்லை.

"ஏன் இந்த இடத்தில் வண்டியை நிறுத்திவிட்டாய்? என்ஜினில் ஏதாவது கோளாரு?" என்று கூறிக் கொண்டு இராகவன் கதவைத் திறந்தான் கீழே இறங்குவதற்கு.

"ஊஹூம்......கதவைத் திறக்காதீங்க. கீழே இறங்கக் கூடாது! நாம் வந்த காரியம் என்ன......!" என்று இராகவன் கீழே இறங்குவதைத் தடுத்தான் டிரைவர்—அவன் கேட்ட கேள்விக்குப் பதில் ஒன்றும் சொல்லாமல்.

'அட, என்ன இது வேடிக்கையாக இருக்கிறது! கீழே இறங்க வேண்டாம் என்கிருன் இந்த டிரைவர். மறைவான இடத்திலே கொண்டுவந்து காரை நிறுத்திக் கொண்டிருக்கிருன். ஏன்?' என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டான் இராகவன், அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒருபுறம் அச்சம். ஒருபுறம் வியப்பு.

இப்படியே சிறிதுநேரம் ஆயிற்று.

இராகவனுக்குச் சொந்த ஊர் விழுப்புரம்தான். வரும்போதே அவனுக்கு ஒரு ஆசை; அந்தக் காரிலேயே தன் வீட்டெதிரில் போய் இறங்கி அங்கே உள்ளவர்களிடம் பேசிவிட்டு வரவேண்டுமென்று: 'சேச்சே, இதிலே என்ன பெருமை இருக்கிறது! முதலாளியின் காரிலே என் வீட்டெதிரில் நான்போய் இறங்கினால், எல்லாரும் முதலாளியின காரை என் கார் என்ரு சொல்வார்கள்? ஓசிடபயல், ஓசிச்சவாரியில் பெருமைவேரு என்றல்லவா சிலர் பேசிக்கொள்வார்கள்' என்று தன் மனத்தில் எழுந்த ஆசைக்குத் தன் மனத்தின்மூலமாகவே கூட்டுப்பாடு விதித்துக்கொண்டு. அந்த வார்த்தையை டிரைவரிடம் எடுக்காமல் இருந்தான். இருந்தாலும் அவன் உள்ளத்தில் திருப்பவும் ஒரு ஆசை எழத்தான்செய்தது அவ்வளவு தூரம் சொந்த ஊர்வரை வந்துவிட்டுத் தன் வீட்டுக்குப் போகாமலே எப்படித் திருப்பிப்போய்விடுவது! ஒரு முறை தன் வீட்டில்போய்த் தலையைக் காட்டிவிட்டாவது வந்துவிடவேண்டும் என்ற ஆசைதான அது. அதை மெல்ல டிரைவரிடம் சொன்னான்.

"ஐயய்யா, நாம்ப வந்திருக்கிற காரியம் என்ன! இதைவிட்டுட்டு அங்கேயும்; இங்கேயும போய்க்கினு இருந்தா எவன் கையிலேயாவது ஆம்புட்டுக்குவோமே! அப்புறம் எல்லாருக்குமாச்சேர்த்து வெலங்கு மாட்டிப் பூடுவானே!"

விலங்கு என்ற வார்த்தையைக் கேட்டதும் இராகவன் வெலவெலத்துப்போனான். 'அப்பாடியோவ்! விலங்கு மாட்டப்படும் அளவுக்கு ஆபத்து நிறைந்த ஒரு வேலைக்கா நான் இங்கே வந்திருக்கிறேன்?' இன்னும் அவன் என்ன காரியத்துக்காக அங்கே வந்திருக்கிருன் என்ற விஷயம் அவனுக்குப் புரியவில்லை. டிரைவரிடம் திரும்பவும் அதைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவோ அந்த வேளை அவனுக்குத் துணிச்சல் வரவில்லை. பின்னும் எதையாவது அவன் பயங்கரமாகச் சொல்லிவைப்பானோ என்ற நடுக்கம். அந்த நடுக்கத்தோடு, குழப்பத்தோடு அவன் டிரைவரையே உற்று நோக்கிக்கொண்டிருந்தான். டிரைவர் தன் பார்வையை நேரெதிரே

விரைப்பாகச் செலுத்திக்கொண்டிருந்தான். அப்போது.

ஒரு பர்லாங் தூரத்துக்கு அப்பால் நேரெதிரே பாட்டரி விளக்கொளியொன்று தென்பட்டது. யாரோ சிறுபிள்ளை பாட்டரி விளக்கைவைத்துக்கொண்டு விளையாடுவதுபோல் இப்படியும், அப்படியும் அந்த பாட்டரி விளக்கின் ஒளி தாறுமாறுகப் பாய்ச்சப்பட்டது. ஒரு நிமிடநேரம் அந்த வெளிச்சம் தெரிந்தது. டிரைவர் அந்த வெளிச்சத்தையே உற்று நோக்கிக்கொண்டிருந்தான். டிரைவரையே பார்த்துக்கொண்டிருந்த இராகவனின் கவனத்தையும் அந்த வெளிச்சம் கவர்ந்தது.

பின்னும் ஒரு நிமிடநேரம் கடந்தது. டிரைவர் காரைக் கிளப்பினுன் கார் மெல்ல நகர்ந்தது. காரின் விளக்குகள் எதுவும் எரியவில்லை. சுமார் நாற்பது கெஜதூரம் கார் இப்படிச் சென்றபிறகு, ஒரு முள் வேலித் தடுப்பை விலக்கிக்கொண்டு நாலுபேர் சத்தமில்லாமல் ஓடி வந்தார்கள், கார் மெல்ல நகர்ந்து கொண்டிருக்கும்போதே அதன் கதவு திறந்துகொண்டது. அந்த நாலுபேரும் காரில் ஏறிக்கொண்டனர். பிறகு கார் விரைந்தது. அதன் தலை விளக்குகள் எரிந்தன.

ஒருமைல்தூரம் கார் சென்ற பிறகு ஓரிடத்தில் நின்றது. அங்கே பாட்டையோரம் அங்கொன்றும் இங்கொன்றுமாக நாலைந்து புளிய மரங்கள் நின்றன. அவ்வேளை அங்கே கவிந்துகிடந்த காரிருளை அந்தப் புளியமரங்கள் பேரிருளாக மாற்றிக்கொண்டு நின்றன.

இடையில் ஏறிய நான்கு பேரும் மடமடவென்று கீழே இறங்கினுர்கள். பக்கத்தில் ஏதோ புதர் போன்ற ஓரிடத்திற்கு ஓடினுர்கள். அவர்கள் இறங்கி அங்கே ஓடிக்கொண்டிருக்கும்போதே டிரைவர் காரை வந்த வழியாகத் திருப்பி அந்த நான்கு பேரும் ஓடிய பக்கமாக ஒரு ஓரத்தில் நிறுத்தினுன். ஓடியவர்கள் மிக விரைவாகத் திரும்பி வந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவர் கையுலும் ஒரு சிப்பக்கட்டு இருந்தது. பரபரப்போடு அவற்றைக் காருக்குள் வைத்தார்கள். டிரைவர் தன் கையிலிருந்த மிகச் சிறிய பாட்டரி விளக்கால் அந்தச் சிப்பக் கட்டுகளின் அடையாளங்களைப் பார்த்துக் கொண்டான். பின்னர் தன் இருக்கைக்கு அடியிலிருந்து எதையோ எடுத்தான். அந்த நால்வரில் ஒருவரிடம் எடுத்ததை நீட்டினுன். அதை வாங்கியவன் கீழே குனிந்து தன்னிடமுள்ள மிகச் சிறிய பாட்டரி விளக்கால் ஒருமுறை நோட்டமிட்டுக் கொண்டான். பிறகு அந்த நால்வரும் புதர்ப் பக்கமாக விரைந்து நடந்தார்கள். அவர்களில் யாரும் டிரைவரிடம் பேசவில்லை. டிரைவரும் அவர்களிடம் பேச்சுக் கொடுக்கவில்லை. ஒவ்வொன்றையும் இராகவன் கவனித்துக்கொண்டு வந்தான். மெல்ல மெல்ல அவன் இரத்தம் உறைந்துகொண்டு வந்தது. ஒவ்வொரு தடவை அவன் மூச்சுவிடும் போதும் அவன் உயிரும் அந்த மூச்சோடு கலந்து வெளியே புறப்பட்டு விட்டு மீண்டு வந்தது.

கார் பறந்தது. அவ்வளவு விரைவாகக் கார் ஓட்டப்படுவதை அதற்குமுன் அவன் சினிமாவில் தான் பார்த்திருக்கிருன். இப்போது அவனுக்கு மூச்சுவிடவும் துணிச்சல் இல்லை. எங்கே மூச்சோடு புறப்படும் உயிர் திரும்பவும் உள்ளே புகுந்து கொள்ளாதோ என்ற அச்சம்.

கார் சென்னை நகருக்குள் ஒரு தெரு வழியாக ஓடிற்று. அவ்வளவு நாள் சென்னையில் இருக்கும் இராகவன் அந்தத் தெருப்பக்கம் வந்ததே கிடையாது. சட்டென்று கார் ஒரு ஓரமாக நின்றது. அந்தக் காருக்குப் பக்கவாட்டில் பட்டென்று ஒரு சிறிய வீட்டின் கதவு திறந்துகொண்டது. அந்த வீட்டுக்குள் மூன்று பேர் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் இராகவன் பணியாற்றும் கம்பெனியின் முதலாளி. அவரைப் பார்த்த போது இராகவனுக்கு இப்போது வியப்பு ஏற்படவில்லை. மாருக அவன் முகத்தில் வெறுப்புக் குறி தான் பளிச்சிட்டது.

அந்த முதலாளி வெளியே வந்தார். இராகவனைத் தட்டிக் கொடுத்தார். அப்போது இராகவனின் உடல் எல்லாம் சிலிர்த்தது. ஏதோ தீண்டத் தகாததொரு பொருளைத் தீண்டிவிட்டது போன்றதொரு உணர்வு அவன் உள்ளத்தில் நறுக்கென்று குத்தியது. அவன் அந்த முதலாளியிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

முதலாளி டிரைவரிடம் நகர்ந்தார். அவன் கையைப் பிடித்துக் குலுக்கினுர். அவனிடம் ஒரு உறையை நீட்டினுர். அவன் 'நன்றி' என்ற ஒரு வார்த்தையோடு அதை வாங்கிக்கொண்டான்.

அதற்குள் முதலாளியோடிருந்த மற்ற இரண்டுபேரும் வண்டிக்குள்ளிருந்த நான்கு சிப்பங்களையும் உள்ளே கொண்டுபோய் வைத்து விட்டனர்.

கார் கிளம்பி ஓடியது — முன்பு போல் வெகு வேகமாக அல்ல.

நிறுத்துமிடத்தில் கார்போய் நின்றது. எப்போது கீழே இறங்குவோம் என்று எதிர்பார்த்திருந்தவன்போல் படீரென்று கீழே குதித்தான் இராகவன்.

"இனிப் பயமில்லை. மெல்ல இறங்குங்கள்'' என்று கலகலவென்று சிரித்துக்கொண்டு டிரைவரும் கீழே இறங்கினுன். அப்போது அவன் எழுப்பிய சிரிப்பொலி பயங்கரக் காட்டுக் கூச்சல்போல இராகவன் காதில் விழுந்தது போலும்! அவன் தன் காதுகளைப் பொத்திக் கொண்டான்.

"உங்கள் உயிரே உங்களிடம் இல்லை, இல்லையா? ஒரேயடியாகப் பயந்து போய் விட்டீங்க இல்லையா? இதுக்கெல்லாம் பயந்து ஆகுமா! நாம பமட்டுமா ஸ்மக்ளிங் செய்யரோம்? நம்ப இலட்சியத்திலே இது ஒண்ணு!"

அந்தவார்த்தையைக் கேட்டுக் கொண்டு இராகவனுல் அங்கே நிற்க முடியவில்லை. "நான் போகிறேன்'' என்று சொல்லிக் கொண்டு அவன் கிளம்பினுன்.

"எங்கே இதற்குள் போகிறீகள்! இதோ!'' என்று தடுத்து நிறுத்தினுன் டிரைவர். முதலாளி கொடுத்த உறையைத் தன் பாக்கெட்டிலிருந்து வெளியே எடுத்தான். அந்த உறையிலிருந்து நூறு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து இராகவனிடம் நீட்டினுன்.

இராகவன் சிறிது நேரம் டிரைவர் முகத்தையே உற்றுநோக்கிக் கொண்டிருந்தான். பிறகு "நீயே வைத்துக் கொள்'' என்று சொல்லிவிட்டு மறுபுறம் திரும்பினுன்.

"ஏன்? போதாது என்கிறீமகளா? இதோ இன்னெரு நூறு ரூபாய்!'' என்று இரண்டு நோட்டுக்களை எடுத்து நீட்டினுன் டிரைவர்.

"சேச்சே, எனக்கு ஒன்றுமே வேண்டாம்! நான்............என்னைப் பற்றி உனக்கு நன்ருகத் தெரியவில்லை''

இராகவனின் வார்த்தை அந்தக் காரோட்டியைத் திணறச்செய்யவில்லை. அதிரச் செய்தது. தன்னிடமிருந்த கவரிலிருந்து பின்னும் ஒரு நூறு ரூபாயை எடுத்தான்.

"இதோ நீங்கள் முந்நூறு ரூபாயை எடுத்துக் கொள்ளுங்கள். முதலாளி மொத்தம் நானூறு ரூபாய்தான் கொடுத்தார். எனக்கு நூறு ரூபாய் போதும்." என்று மூன்று நூறுரூபாய் நோட்டுகளை எடுத்து நீட்டினான்.

"டிரைவர், நான் ஏன் வேண்டாம் என்கிறேன் என்பதை நீ நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை. எனக்கும் இந்த விவகாரங்களுக்கும் ரொம்பத் தூரம். என்னைச் சும்மா போகவிட்டால் போதும். நான் போகிறேன். எல்லாவற்றையும் நீயே வைத்துக் கொள்!"

இவ்வாறு கூறிவிட்டு இராகவன் விடுவிடு என்று நடந்தான். டிரைவர் அவனைப் பின்னும் அழைக்கவில்லை. மறிக்கவில்லை. "இந்த ஆள் ரொம்ப ரொம்ப விநோதமான ஆளா இருக்கிறானே!" என்று தனக்குள் முனகிக் கொண்டான் அவன்.

மறுநாள் முதல் வேலையாகக் காரோட்டி இராகவனைப் பற்றிய விஷயத்தை முதலாளியிடம் சொன்னான். முதலாளிக்கு அப்போது அடி வயிற்றில் திகீல் என்றது. எங்கே இந்த இராகவன் எல்லாவற்றையும் சொல்லவேண்டிய இடத்திலே போய்ச் சொல்லிவிடுவானோ என்று நடுங்கினார் அவர்.

உடனே முதலாளி இராகவனை அழைத்தார்.

'என்னப்பாஇராத்திரி நீ ஒரு மாதிரி நடந்துகிட்டியாம்! உலகத்திலேயே நாலு பேரு மெச்சறாப்பலே நல்ல வாழ்க்கை வாழணுமின்னா இப்படி எல்லாம் செய்துதாம்ப்பா ஆகணும். நீ பொழைக்கத் தெரியாதவனா இருக்கிறியே!"

இராகவனுக்குஇழைந்து,குழைந்து பேசத் தெரியாது. மனத்திலே உள்ளதை அப்படியே பட்டென்று மெருகு இல்லாமல், வந்த வார்த்தையை வந்தபடியேதான் சொல்லத் தெரியும். அவன் சொன்னான்:

"இந்தப் பிழைக்கிற வழியெல்லாம் எனக்குப் பிடித்தமில்லாத வழிங்க. நாலுபேர் மெச்ச வாழவேணும் என்பதற்காக நியாயத்துக்கு விரோதமான காரியம் செய்து ஊரை ஏமாற்றுவது ரொம்ப ரொம்பத் தப்பு. அதைவிட நியாயமான வழியிலே பாடுபட்டு அரைவயிற்றுக் கஞ்சி குடிப்பது எவ்வளவோமேல்.என்னைப் பொறுத்தவரையிலும் . . . . "

அதற்குமேல் அந்த முதலாளியால் இராகவனின் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு நிற்க முடியவில்லை. அப்போது அவருக்கு வந்த ஆத்திரம், மூண்டுவிட்ட சினம் இராகவனை அப்படியே குத்திக் கொலைசெய்துவிடலாமா என்றுதான் இருந்தது. இடமும், காலமும் ஒத்திருந்தால் அவர் அப்படிச் செய்யவும் தயங்குபவரல்லர்.

"போதும், போதும்! உன் நியாய வாதத்தை அப்படியே நிறுத்திக்கோ! உன்னைப் போன்ற ஆள் நம்ப கம்பெனிக்குச் சரிப்பட்டு வராது. நீ இப்பவே நடையைக் கட்டிடு!" என்று பெரியதொரு அதட்டற் குரலோடு கூறினார் அந்த முதலாளி.

"நானும் அதையேதான் சொல்ல வந்தேன். இதோ என் விலகல் கடிதம்" என்று தன் சட்டைப் பையிலிருந்து விலகல் கடிதத்தை எடுத்து முதலாளியின் மேசைமீது வைத்தான் இராகவன்.

அந்த விலகல் கடிதத்தைப் பார்த்ததும் பின்னும் திகீல் என்றது அந்த முதலாளிக்கு. 'இந்தப் பயல் ரொம்ப ஆபத்தான பயலாஇருப்பான் போலிருக்கே' என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டார். தம்முடைய ஆவேசமான உரத்த குரலை மாற்றிக் கொண்டு பேசத் தொடங்கினார்.

"என்ன இராகவா! இதற்கெல்லாம் போய் விலகல் கடிதத்தையா நீட்டுவது! இனிமேற்பட்டு வேணுமானா உன்னை அந்த மாதிரி வேலைக்கெல்லாம் அனுப்புவதில்லை! அவ்வளவுதானே!"

இராகவன் அந்தக் குழைவுக்கு மசிபவனாக இல்லை. தன் விலகல் கடிதத்தையே வலியுறுத்திக்கொண்டு நின்றான். முதலாளியின் சாகசப் பேச்சுக்கள் அவனிடம் செல்லுபடியாகவில்லை.

வேறு வழியின்றி இராகவனின் விலகலை முதலாளி ஏற்றுக்கொண்டார். அந்தக் கம்பெனியிடமும், அதன் முதலாளியிடமும் கடைசி விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்தான் இராகவன். அங்கிருந்தோர் அவ்வளவு பேரும் அவனை ஒரு அதிசயப் பொருளை வேடிக்கை பார்ப்பது போல் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

வெளியேறித் தன் அறைக்கு வந்த பிறகுதான் மேலே என்ன செய்வது என்பதுபற்றி எண்ணத் தொடங்கினான் இராகவன். ஒருபுறம் அவன் பெரிய மனமாசிலிருந்து விடுபட்டு வந்துவிட்டதாக எண்ணியபோது அவன் உள்ளம் குதூகலித்தது. பிறிதொருபுறம் அவன் தன் எதிர்காலத்தைப் பற்றி நினைத்துப் பார்த்தபோது அவனை நோக்கிப் பெரியதொரு சூனியமே நீண்டு நிற்பதாகத் தோன்றியது. சிறிது நேரம் எந்தச் சிந்தனையுமில்லாமல் உட்கார்ந்திருந்தான் அவன். பிறகு தன்னிடம் சம்பளப் பாக்கியாகக் கொடுக்கப் பட்டிருந்த பணத்தை எண்ணிப் பார்த்தான்.ஒருவாரத்திற்கு முன்னர் தான் ஏதோ அவசரமாகத் தன் வீட்டுக்கு அனுப்புவதற்காக நண்பர் ஒருவரிடம் கடன் வாங்கியிருந்தான். முதலில் அந்தப் பணத்தைக்கொண்டு போய்க் கொடுத்தான். பிறகு யார் யாருக்கோ சில்லறை சில்லறையாகக் கொடுக்கவேண்டியிருந்தது. எல்லாவற்றையும் கொடுத்துத் தீர்த்தான். மிஞ்சியது ஒரே ஒரு ரூபாய்தான். அந்த ஒரு ரூபாயை வைத்துக் கொண்டு அவன் என்ன செய்வான்? தெரிந்தவர்களிடம் நிலைமையை எடுத்துச் சொல்லாமலேகூட ஐம்பது ரூபாய்க்குமேல் அந்த வேளை அவன் கடன் வாங்கிவிடலாம். ஆனால் அவனோ . . . .

சிறிது நேரத்துக்குப் பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டவன்போல் தன் பெட்டி, படுக்கை முதலிய சாமான்களை யெல்லாம் எடுத்து மூட்டை கட்டினான். நண்பர் ஒருவர் வீட்டில் கொண்டுபோய்ப் போட்டான். அப்படியே கிளம்பிவிட்டான் விழுப்புரத்தை நோக்கிக் கால்நடையாகவே. அந்த விசித்திரப் பிறவியின் விசித்திரமான போக்கைக் கண்டு நகைக்கவோ, இரங்கவோ, வருந்தவோ யாருமில்லை. காரணம், தன் காரியம் அவ்வளவையும் அவன் யாரிடமும் சொல்லிக்கொண்டு நிற்கவில்லை.

இராகவன் தன் சிந்தனைத் துயிலிலிருந்து விடுபட்டு நிமிர்ந்து பார்த்தபோது, அவன் கரத்தைப் பற்றி உட்கார வைத்த அந்த சூட் கோட் ஆசாமி எதிரே வேறொரு கல்லின் மீது உட்கார்ந்துகொண்டு இராகவனையே உற்று நோக்கிய வண்ணமிருந்தார்.

சிறுபொழுதில் திடுதிடுவென்று சத்தம் கேட்டது, நாலைந்து பேர் ஓடி வந்தார்கள். எதிரேயிருந்த சூட் கோட் ஆசாமி சாவதானமாகச் சொன்னான்:

"இவனைக் கைது செய்யுங்கள்!"

குற்றப் பிரிவு இன்ஸ்பெக்டர் எதிரில் நிறுத்தப்பட்டபோது இராகவன் மட்டும் நிறுத்தப்படவில்லை. அவனோடுகூட அவன் அலுவல் புரிந்த கம்பெனி முதலாளி நின்றார். அந்தக் காரோட்டி நின்றான். இன்னும் அடையாளம் தெரியாத யார் யாரோ நாலைந்து பேர் நின்றார்கள்.

அந்த நெருக்கடியான கட்டத்திலும் இராகவனின் பழைய முதலாளி அவனைப் பார்த்துச் சொன்னார்.

"என்னப்பா! நீ தனியாகத் தொழில் செய்யப்போய் எங்கள் எல்லாரையுமே மாட்டிவிட்டாயே!".

அப்போது அந்த விசித்திரப் பிறவி யிடமிருந்து ஒரு வெற்றுச் சிரிப் பொலிதான் அதற்குப் பதிலாக வந்தது.

✽

# நாவினுல் சுட்ட வடு

ஏராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நற்றமிழரின் பண்புகளை அறிய, முதலில் 'நற்றிணை'ச் சாணையில் உங்களது கற்பனைத் திறனைச் சிறிது கூர்படுத்திக்கொள்ளுங்கள். கன்னித் தமிழ்க் கவிஞன் கந்தரத்தனார் காட்டும் காவியப் பூங்கோவிலினுள் நுழையுமுன், அங்கே காலில் சதங்கையுடன் கரங்கெனச் சுழன்ருடும் கார்முகிலாள் வதியும் குறிஞ்சி நில அமைப்பினை நோக்குவோம் வாருங்கள்.

மலையையும் மலைசார்ந்தஇடத்தையும் குறிஞ்சி நிலமென்பர். உலைவின்றித் தாழாது உஞற்றும் குறவர் குலப் பெருமக்களுக்குத் தோன்றாத் துணையாக அமைந்துள்ள மலைவளமும், ஆங்கமைந்த நீர்வளமும், நிலவளமும் என்றும் நீங்காத நீர்மையுடையன. பெருமழையின் பயனாக முழவின் இசையொடு இழிந்தோடும் தண்ணருவி—அதன் இருமருங்கிலும் எழிலாக ஓங்கி வளர்ந்துள்ள மரங்கள்—அதன் உயர்கிளைகளில் தன் பேடையுடன் இளவெயில் நுகரும் ஆண் மயில் ஒருபுறம் — கையில்பற்றிய தினைக் கதிருடன் தன் துணையுடன் உலவும் மந்திகள் ஒரு சார்—உறுமீன் உண்ட கொக்குகள் ஒரு சிறை—பொன் இமைக்கும் புழுதியைக் கிளறும் கோழிகள் ஒரு பக்கம்—இன்னும் தாவும் மான்கள், சீறும் சிங்கங்கள், கணக்கில—அங்கேகளித்து வாழ்ந்தன.

இங்ஙனம் உவந்து வாழும் குறிஞ்சி நிலத்து உயிரினங்களில் அன்பிற்கு எடுத்துக் காட்டாய், ஆண்மையின் அணிகலனுய் விளங்குவன ஆண் யானைகளும் அவற்றின் துணைகளுமாகும் அணித்தே செல்லும் தன் துணையையும், அன்புக் கன்றினையும் அணிபெறத் தன் துதிக்கையால் ஆண் யானை அணைத்தவண்ணம் செல்லும் காட்சி, கவிஞனின் உள்ளத்தைவிட்டு நீங்காத நிறைவு பெற்றதாகும். சிறிய கண்ணையும், பெரிய கையையும் உடைய பிடியும் களிறுமாகக் காலமெல்லாம் களித்து வாழும் அவ் இரண்டினமும் குளவிச் செடி சூழ்ந்த தண்சுனையிலே மெய்துவளப் புணர்ந்து, சோலையிலுள்ள வாழையைத் தின்பதை வெறுத்து, மூங்கிலை வேலியாகவுடைய குறிஞ்சியூரின் சிறிய குடியின் கண்ணுள்ளார் கண்டு நடுங்கும்படி பலாவின் பழத்தைத் தின்னும். இப்படி கானவர் தினமும் கண்டு புகழும் அவற்றின் வாழ்வு, கானுற்று வெள்ளமென கவிஞன் உள்ளத்தில் கவிதைப் பெருக்கை ஓடச் செய்யும் கவின்பெறு வாழ்வாகும்.

இன்னும் அருவிக் கரையோரம் அடர்ந்திருந்த மரங்கள், துணையென

**மு. தமிழ் நாகன்**

அவற்றைப் பின்னிப் படர்ந்திருந்த கொடிகள் கணக்கில' ஓங்கி வளர்ந்த மூங்கில்களின் வேர்கள் ஒன்றோடொன்று பிணைப்புண்டிருந்தன. சிறிய குடிசை வாழ்வோர்க்குப் பெரிய அரணாக அமைவன அவைகளே. இவை தவிரச், சிவந்த வேர்களையுடைய, கிளைகள் தோறும் குடம் போன்ற காய்கள் தொங்கும்கொழுஞ்சுளைப் பலா மரங்கள், புளிப்புச் சுவையுடைய பழங்கள் மிக்குள்ள நெல்லி மரங்கள், கூர்வேலையுடைத்தாற்போன்ற இலையுடைய இற்றி மரங்கள் நெருப்புக் கொழுந்துவிட்டுப் பரவினாற் போன்ற பூங்கொத்துக்களையுடைய வேங்கை மரங்கள், செருக்களம் நீங்கிய செங்குருதி படிந்த வேழத்தின் வெண்கொம்பு போன்ற முகை, செங்காந்தாள் மலரில் தோயும் குலையீன்ற வாழைகள் நிறைந்ததால், வளம் நிறைந்த நிலப்பாங்கு இத்தனை மரங்களும், சுற்றிலும் கார்முகில் தவழும் கரிய மலைகளும் சூழப் பெற்றிருந்ததால் குறிஞ்சியூர் இருட்சி பெற்று விளங்கியது. இதனுல் 'இருள்முகை' எனவும் கூறுவர்.

இருள்முகையிலே வாழ்ந்தாலும் அங்கு வாழ்ந்த மக்கள் உள்ளங்களிலே இருள் படியவில்லை; அருள் பெற்றே விளங்கினர். மாசு படியாத மாண்பு பெற்று இலங்கினர். தூசு படியாத தூய்மை பெற்றுத் துலங்கினர். எதனையும் நுண்ணுணர்வால் ஆய்ந்தறியும் திறன் பெற்றுத் திகழ்ந்தனர். பகுத்தறிவால் வகுத்தறியும் வாய்மையுடைத்திருந்தனர். நீதியின் நிலைக்களனுய் — உண்மையின் உறைவிடமாய்—பண்பின் பாசனமாய் — நட்பின் நாயகராய் விளங்கினர். பண்பில்லாதவர்களைக் கண்டு பதைத்தெழவில்லை அவர்கள். குற்றம் செய்பவர்களைக் கண்டால் அவர்களின் குருதி கொதிக்கவில்லை துன்பம் இழைப்பவர்களைத் 'தூ'வெனத் தூற்றவில்லை. தீமை செய்பவர்களைத் 'தீ'யென விலக்கவில்லை. இழிசொல் சொல்பவரை இகழ்ந்துரைக்கவில்லை. பாதகம் செய்பவரைப் பழித்துரைக்கவில்லை.

மாருக, இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தனர். அடித்துத் திருத்தும் அன்னைபோல் அல்லாமல், பொறுத்துத் திருத்தும் தாய்போல் விளங்கினர். காதகச் செயலைக் கண் முன்னே கண்டும், காசினி அறிய அதனைக் கழறித் திரியவில்லை. மாருகக் கழிவிரக்கம் கொண்டனர், இதனுல்

பாதகம் செய்பவர்க்குச் சாதகமாய் விளங்கினர் என்ற பொருளல்ல. பாதகம் செய்தவர்கள் தம் பகுத்தறிவின் துணைகொண்டு உள்ளத்தால் தெள்ளிதின் ஆராய்ந்து — அறிவு தெளிந்து—அகம் மறைந்து — உன்மத்தம் இறந்து — உணர்வு பிறந்து— தான் செய்தது தவறெனக் கண்டு — தனிமையில் வருந்தித் திருந்தும்வரை பொறுத்திருப்பர் திருந்தினால் புகழ்ந்துரைப்பர் இல்லையெனில் அவர் மனம் தெளிவு பெறும்வரை அல்லை யாண்டமைந்த மேனி அவ்வழிவிடுத்து நல்வழிச் செல்லும்வரை அறிவுறுத்துவர்; மிகின் அச்சுறுத்துவர். ஆனால் பாரறியப் பழித்துத் திரியமாட்டார்கள். 'பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு' என்பதற்கு இலக்காக இலங்கினர்.

என்றாலும், ஆன்றவிந் தடங்கியன வற்றிற்கு மாறான இயல்புடையவர்களும் அன்று வாழாமலில்லை; வாழ்ந்தனர். இத்துறையில் பெண்டிரே மிக்க திறன் பெற்றிருந்தனர். தூற்றும் பணியைப் போற்றித் திரிந்தனர். மங்கையின் கற்பில் மாசுபடின் தங்கு தடையின்றி அங்குமிங்கும் அரற்றித் திரிந்தனர். மங்கையின் மனம் மாறுபடினும் பழிச்சொல் கூறுவதை மாதர்கள் ஒழிப்பதில்லை.

இத்திறத்து மக்கள் வாழும் குறிஞ்சியின நல்ல ஊரின் கண்ணே தான் நமது தலைவியும் வாழ்ந்தாள். நயனும், நண்பும் நாணும், பயனும், பண்பும், பாடறிந் தொழுகலும் மிக்குடைய தலைமகன் ஒருவனைக் காதலித்தாள்; களிப்புற்றிருந்தாள். காலம் கடிது சுழன்று கழிந்தது. கங்குலில் கண்டு, களவொழுக்கத்தில் களிப்புற்றிருந்த தலைவி இங்கு இந்நிலை நீடிப்பது தவறென உணர்ந்து, என்றும் நீங்காமல் நிலவொளியில் இன்பம் துய்க்க நாடினாள். நாடிய எண்ணத்தை நாயகன் முன்னிலையில் நாவாலுரைக்க நாணினாள். தோழியின் உதவியைத் தேடினாள்.

அறிவும், திறனும் செறிவுற அமைந்த தோழி முடிவும் இடையூறும் படுபயனும் உணர்ந்து, பலகால் திட்டமிட்டுத் தலைவனை அணுகினாள். பக்குவமாகத் தன் தோழியின் வாழ்வு சிறக்க வேண்டிய வழிவகையினைக் கூறினாள். அவனது இல்லக் கிழத்தியாக்க இறைஞ்சினாள். நன்றெனப் பட்டது தலைவனுக்கு. பரிசப் பொருளுடன் தலைவியின் பெற்றோர்களைச் சந்திப்பதாகக் கூறிவிட்டுச் சென்றுவிட்டான்.

இந்நிலையில் தலைவியின் களவொழுக்கம் காட்டுத் தீ போல் குறிஞ்சியூரெங்கணும் பரவியது. கரும்பு தின்னக் கூலியா வேண்டும்? வெறும் வாயை மென்று கொண்டிருந்த மாதர்களுக்கு ஒருபிடி அவல் கிடைத்தாற்போல் ஆயிற்று. தலைவியைக் கடைக் கண்ணால் சுட்டி நோக்கி 'அலர்தூற்றலா'யினர். "உயர் குடிப் பிறந்தாள், பெருநாணமுடையாள், இவளா காமந்தலைக் கொண்டு அலைகிறாள்!," என வியப்பெய்தித் தத்தம் மூக்கின் நுனியிலே சுட்டுவிரலை வைத்துப் பழிசொல் கூறித் தூற்றினர். இச்செய்தி அன்னையின் செவிக்கு எட்டியது. அனலெனக் கொதித்தது அவள் உள்ளம்.

சின்னாளில் வேங்கை மலர்ந்தது. வெண்ணருவி தெளிந்தது. தேன் மணம் கமழ்ந்தது. தினை கொய்யும் காலமும் வந்தது. அன்னையின் ஆணையால் தலைவி இல்லினுள் சிறைப்பட்டாள். கடியகாவல் தலைவியை வெளியேற வொட்டாமல் தடுத்தது. தமியளாய் வருந்தினாள். ஊரார் தூற்றும் பழிச்சொற்கள் வேலெனத் தைத்தன. வெந்துயரை விளைத்தன. இசைவல்லார் உருகி இசைக்கும் ஆம்பல் குழல் போல அரற்றி அழுதாள் தலைவி. மழையில் நனைந்த நீலமர்போல் கண்கள் எழிலை இழந்தன. மணஞ்செய்து கொள்வதாகச் சொல்லிச் சென்ற தலைவன் இன்னும் வந்தபாடில்லை. தலைவியின் உள்ளம் தனிமையில் உழன்றது. இந்நிலையில் தோழியைத் தவிர, தலைவியின் துயரை யாரே ஆற்றவல்லார்?

தலைவிக்கு ஏற்பட்ட துயரின் அடிப்படையான காரணத்தைத் தோழி நன்றாக அறிவாள் அதனை ஆற்றும் வழியையும் அறிவாள். ஆனால், அத்தருணத்தில் ஒன்றும் இயலாதவளாயிருந்தாள். அந்நிலையில் தலைவியின் ஆற்றாமையில் தானும் பங்குகொண்டு துயரை அரவணைத்துக் கொண்டிருப்பதைவிட ஆறுதல் கூறுவதுதானே ஆருயிர்த் தோழியின் தலையாய கடன்.

"துன்பத்தை மனத்தினுள்ளே அடக்கிவைத்துத் தன்னைத்தானே வெறுத்து, வெந்து வெதும்பிக்கொண்டிருப்பதைவிடத், தனது துயரை உற்றவரிடம் மனம்விட்டு உரைப்பதினால், தான் கொண்டிருக்கும் சுமையில் பாதி குறைந்த மாதிரியாகும்," என்பர் உளநூலார். இதனை மனத்திற் கொண்டே தோழியும், தலைவியை வாய்விட்டுத் தனது ஆற்றாமையை வெளிப்படுத்தச் செய்து ஆறுதல் கூறத் தொடங்குகிறாள், பாருங்கள்.

"தோழி, நானும்பார்த்துக்கொண்டுதான் வருகிறேன். நீயாகவே துன்பத்தை வரவழைத்துக்கொண்டு வீணாக உழன்றுகொண்டிருக்கிறாயே?"

"வேறு என்ன செய்யமுடியும்? தீவினை செய்தவர்கள் தீவினையைத் தானே பலனாகப் பெறமுடியும்."

"நீ அப்படி என்ன தீவினை செய்துவிட்டாய்? தீயை மிதித்தவள்போல் திகிலுறுகிறாயே!"

"குற்றமுள்ளவர் நெஞ்சுதானே குறுகுறுக்கும்."

"சுற்றி வளைத்து ஏன் பேசுகிறாய்? உன் காதல் கைகூடவில்லை என்று தானே கலங்குகிறாய்? 'பரிசப்பொருள் கொணர்கிறேன்' என்று கூறிச் சென்றவர் இப்பாதையையே மறந்து விட்டார் என்று எண்ணித்தானே ஏங்குகிறாய்?"

"................."

"தோழி, வான்மதியே நிலைமாறினும், காதலர் நெறிதவறமாட்டார். உறுதியாக விரைவில் அவர் உன்னை வந்து சந்திப்பார். அதுவரை வலிந்து பொறுத்திரு. வீணாக வருந்தாதே."

"அவரை எண்ணி நான் வருந்தவில்லை. ஆனால் பல எண்ணங்கள் என் சிந்தனையைச் சிதறடிக்கின்றன."

"அவைகளைத்தான் மனத்தினுள் அடக்கிவைத்திராதே. வெளிவிட்டுச் சொல் என்கிறேன்."

ஏதோ சொல்ல நினைத்த தலைவி திடீரென்று பேச்சின் போக்கை மாற்றுகிறாள். தலைவியின் உள்ளக் குமுறலைத் தோழி நன்றாக அறிவாள். ஆதலால் மீண்டும் மீண்டும் அதனைக் கிளறிக்கொண்டே இருக்கிறாள். தலைவியே மீண்டும் உரையாடலைத் தொடங்குகிறாள்.

"தோழி, நேற்றுமாலை நம் குடிலின் அருகில் மக்கள் பெரும் அளவில் குழுமி நின்றார்களே, ஏன்?"

"அதுவா, ஒரு இளம்பிடியின் வயிற்றிலுள்ள சூல் நன்றாக முதிர்வதற்கு முன்னமேயே அழிந்து புறம் போந்து கிடந்தது. அதனைச் சுற்றி எல்லோரும் நின்றுகொண்டிருந்தார்கள்."

இதைக் கேட்டதும் தலைவியின் முகம் யாரோ பளீரென்று அறைந்

தாற்போலாயிற்று. பெண்ணினத்திற்காக இரங்குவது ஒரு பெண்ணின் உள்ளமாகத்தானே இருக்க வேண்டும்.

"என்ன? சூல் அழிந்துவிட்டதா? அதற்கு என்ன காரணமென்று கூறுகிறாள்?"

"மூங்கிலில் முளைத்தெழுந்த இலையில்லாத கொழுவிய முளையைத் தின்றிருக்கவேண்டும் என்று எண்ணுகிறாள்."

"அதற்கு அத்துணை ஆற்றல் இருக்கிறதா?"

"இல்லாமலா இவ்வளவும் நிகழ்ந்திருக்கிறது"

"அதற்கு அவ்வளவு திறன் இருக்கும்பொழுது, அதனை ஏன் அந்த இளம்பிடி யானை வலியச் சென்று தின்றுவிட்டு, இப்பொழுது சூல் பிண்டமாகி விழுந்த பிறகு வருந்த வேண்டும்?"

"பகுத்தறிவுள்ள மனிதனுக்கே நன்மை, தீமைகளைப் பகுத்துணர முடியவில்லையே! பாவம்! பகுத்தறிவில்லாத உயிரினம் அது! அதற்கென்ன தெரியும்?"

"அவ்விதமானால் அறியாமையினால் தான் அதனைத் தின்றுவிட்டதென்று சொல். அதனைத் தின்றால் விளையும் கொடுமையை அது அறியவில்லை அல்லவா? பின்பு வருந்த நேரிடும் என்பதை அது முன்னதாகவே உய்த்துணர முடியாததாகிவிட்டதல்லவா?"

இவ்வினக் கணைகளைத் தொடுக்கும் பொழுது தலைவியின் கண்கள் குளமாவதைத் தோழி கவனித்தாள்.

"அது சரி, அதற்காக நீ ஏன் கண் கலங்குகிறாய்? ஏனே, அதற்கும் உனக்கும் ஒட்டிய உறவு இருப்பது போலல்லவா தெரிகிறது. கழிவிரக்கம் கொள்ளும் அளவுக்கு இப்பொழுது என்ன நடந்துவிட்டது?"

"நிறைய நடந்துவிட்டது. நீ சொல்லியபடி எனக்கும் இந்நிகழ்ச்சிக்கும் ஒட்டிய உறவுதான் உள்ளது."

"ஒட்டிய உறவா! அப்படியென்றால்.........!"

"விபரீதப் பெருளை விளைவிக்காதே. அந்த உறவை நான் பிறகு விளக்குகிறேன். முதலில் நான் கேட்பதற்குப் பதில்சொல், நம் ஊரில் பலாக் கனிக்கு மிக்க சிறப்புண்டு அல்லவா?"

"ஏன் இல்லை? ஒவ்வொரு வீட்டின் முன்றிலிலும் பலாமரங்களைக் காண முடியுமென்றால் அதன் சிறப்பைச் சொல்லியா தெரியவேண்டும்."

"ஊரை விடுத்து, மலைப்பக்கங்களில் வளரும் பலா மரங்களைப்பற்றி நீ என்ன அறிவாய்? விளக்கமாகச் சொல்லேன்."

"மலைப்பக்கங்களில் வளரும் பலா மரங்களின் வேர்கள் சிவந்திருக்கும். ஆனால் கிளைகள் கரிய நிறமுடையனவாய் இருக்கும். வேர்களில்கூடப் பழுத்த பலாக் கனிகள் கோரிக்கையற்றுக் கிடக்கும் என்று சொல்வார்கள். சில சமயங்களில் பசுக்கள் அவற்றைத் தின்றுவிட்டு, அருகில் உள்ள மூங்கில் வளர்ந்த காட்டில் சென்று நீர் பருகும். வேர்களில் மட்டுமல்ல; கிளைகளில்கூடக் குடத்தினளவுக்குப் பெரிய வடிவுடைய பழங்கள் நன்றாக முற்றிப் பழுத்துத் தொங்கும். காம்பு பழுத்து தானாகவே கீழே விழுந்து விடுவனவும் உண்டு. பலதடவை நான்கூட அவற்றை எடுத்து வந்திருக்கிறேனே!"

"நீயா! அப்படியென்றால் அது மிக்க சுவையுள்ளதாக இருக்குமோ!"

"சந்தேகமென்ன? தானாகப் பழுத்தால் பழமா, தடியால் அடித்தால் பழமா?' என்றொரு பழமொழிகூடச் சொல்வார்கள். தானாகப் பழுத்த பழத்திற்கு மிக்க சுவையுண்டு. பலா மட்டுமில்லை; முக்கனிகள் அனைத்திற்குமே உள்ள தனிச்சிறப்பு அது.

"எனக்கொரு சந்தேகம்!"

"என்ன?"

"பலாக்கனி தானாகப் காம்பு இற்றுக் கீழே விழுந்தால்தானே எடுத்து வருவோம் என்று சொல்கிறாய். அப்படியல்லாமல் காம்பு பழுத்து, காய்ந்து, சுருங்கி கீழே விழாமல் மரத்திலேயே தங்கிவிட்டால் என்ன செய்வீர்கள்?"

"சும்மா விடுவோமா, என்ன? பலாவின் முள்ளம் பன்றியின் உடம்பு போன்றமேற்பாகத்தில் ஏற்பட்டுள்ள பிளப்புகளிலிருந்து அது நன்றாக முற்றிப் பழுத்துவிட்டது என்பதை அறிந்துகொள்வோம். பின்பு நீண்ட தடியின் உதவியால் காம்பின் பக்கத்தில் அடித்துக் கீழே விழச் செய்வோம்."

"தரையில்விழுந்ததும் எடுத்து வருவீர்கள், அப்படித்தானே."

"ஆமாம்."

"மலைப் பிளப்பின் ஓரங்களில் கூடப் பலா மரங்கள் வளர்ந்து நிற்கும் என்று சொல்வார்களே. உண்மை தானா?"

"ஆமாம்."

"அந்தவிதமான இடங்களில் பழங்களைப் பெற என்ன செய்வீர்கள்?"

"நான் இப்பொழுது சொன்ன முறையையே கையாளுவோம்."

"சரி, தடிகொண்டு பழத்தின் காம்பைத் தாக்குவீர்கள். அப்பொழுது பழம் தரையில் விழாமல் மலையின் பிளப்பாகிய அளையில் விழுந்துவிட்டால்.........!"

"இலவு காத்த கிளிபோல்தான் ஆகிவிடும் எங்களின் நிலைமை.முயற்சியெல்லாம் வீணாகி, மகிழ்ச்சியெல்லாம் பாழாகித், தளர்ச்சியுடன் வீடு திரும்புவோம்."

"அந்த நிலைதான் எனக்கும்."

"உனக்குமா?"

"ஆம். நான் பறிக்க முயன்ற பலவின் கனி அளையில் வீழ்ந்து அழிந்து விட்டது."

"என்ன? நீ பலாப்பழம் பறிக்கச் சென்றாயா? எப்பொழுது? எனக்குத் தெரியாமலா? நீதான் இலலத்தைவிட்டு வெளியே செல்லவேயில்லையே!"

"பல தடவை சென்றேன். பயன் துய்த்தேன். ஆனால், அப்பலவின் மாச்சினை துறந்த கோள் முதிர்ப் பெரும் பழம் எனக்குப் பயன்படாமல் விடரளை விழ்ந்து விட்டது."

"கவிவாணியாகி விட்டாயா.என்ன? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே! அப்படியே ஆகியிருந்தால் தயை செய்து எனக்கு அதன் உள்ளுறை உவமத்தையாவது சொல்."

"எல்லாம் என் காதலைப் பற்றித் தான் சொல்கிறேன்."

"காதலா!"

"ஆம். என் காதல் கனி, பலவின் கனியைப்போல் முற்றி முதிர்ந்து, சுற்றிப் பழுத்து வரும் நிலையில் இல்லத்துக்குக் கொண்டு வந்து அதன் சுவையைத் துய்க்க நாடினேன். ஆனால் அது எனக்குப் பயன்படாமல் —கை கூடாமல் அளையின் கண்ணே வீழ்ந்துவிட்டது. எனது நிலையும் தாழ்ந்துவிட்டது."

"என்ன? அப்படியென்றால் காதலர் உன்னைக் கைவிட்டுவிட்டார் என்று கூறுகிறாயா?"

"ஆமாம். பலவின் மாச்சினைக்கும் பழத்துக்கும், அதனைச் சுவைக்க எண்ணும் வேட்கையுடையாவுக்கும் பழத்துக்கும் இடையேயிருந்த தொடர்பு அறுந்து போனதுபோல், அவருக்கும் எனக்கும், எனக்கும அவருக்கும் இடையே இருந்த தொடர்பு எண்ணற்ற நாட்களுககுமுன்னமேயே அறுந்துபோய் விட்டது. இதைத்தான் நீ அறிவாயே!'

"அறிவேன். ஆனல், உன்னுடைய தொடர்பு அறுந்துபோய்விட்டது என்பதற்கு என்ன உறுதி? பரிசப்பொருள் திரட்டுவதில் தடையேதும் ஏற்பட்டிருக்கலாம். அதனல் காதலரின் வருகையில் தாமதம் ஏற்படுகிறது. அதற்காகக் காதலே மறைந்துவிட்டது என்ரு தவருகக் கூறுவது!"

"நீ அறியாமல் பேசுகிருய். அளையிலே விழுந்த கனியை மீண்டும் பெறுவதற்கு யாராவது முயற்சி செய்வார்களா? முயன்ருலும் அவர்கள் வெற்றி பெறுவார்களா? வெற்றி பெற்ருலும், நன்ருகப் பழுத்த ஏற்கனவே பிளப்புண்ட கனி, மிக்க உயரத்திலிருந்து கீழே விழுந்தால் சுவைப்பதற்கு ஏற்ற நிலையிலா இருக்கும்?"

"உன்னேடு வாதாட யாரால் இயலும்?"

"மலைநாடனின் கேண்மை அறுந்து போனதைப் பற்றிக்கூட நான் வருந்தவில்லை. ஆனல், அவருக்கும் எனக்கும் தொடர்பில்லாமல் இருக்கும் இந்த நிலையிலும்கூடக் குறிஞ்சியூர்ப் பெண்டிர்கள் என்மீது அலர் தூற்றுதலை ஒழிக்கவில்லையே! எட்டியும் சுட்டியும் பேசுகிருர்கள்; கண்சாடை காட்டுகிருர்கள். குழுக் குழுவாக நின்று குழூஉக் குறியுடன் குறிப்புணர்த்துகிருர்கள். ஏனே தெரியவில்லை, நல்லனவற்றையே அவர்கள் பேசினுலும் என் உள்ளம் சந்தேகக் கண் கொண்டே நோக்குகிறது. சந்தியில் நின்று பேசும் மாதர்கள் என் சந்தேகம் நீங்கும்படி சத்தமிட்டுத்தான் சொன்னல் என்ன?"

"அதெப்படிக் கூறமுடியும்? எட்டியும் சுட்டியும் காட்டப்படும் குலத்தில் பிறந்தவளா நீ? பெருங்குடியில் பிறந்து, பெருநாணமும் உடைய பெருமடந்தை உன்னைப் பெயர் சொல்லித் தூற்ற அவர்களுக்கு என்ன அருகதை உள்ளது? அவர்கள் தூற்றுவதினல் நீ ஏன் அல்லலுறுகிருய்? 'அலரில் தோன்றும் காமத்தின் சிறப்பே' என்று பெரியவர்கள் கூறுவதை நீ கேட்டதில்லையோ?"

"கேட்டிருக்கிறேன். உயர்குடியில் பிறந்து, நாண் முதலியவற்றல் மேம்பட்டிருக்கும் ஒரே காரணத்தினல் தான், நான் அவர்களுக்கு அஞ்ச வேண்டியுள்ளது. முன்பு நீ இளம் பிடியின் செயலைச் சொன்னபொழுது எனது முகத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கும் இதுதான் காரணம்."

"நீயும் அதைப்போல் எதையும் உண்டுவிட்டாயோ!'

"கொல்லாமல் கொல்லும் சொல்லம்புகளைவிட, உயிரை வெல்லும் பொருள் வேறு உண்ணவும் வேண்டுமோ? அறிவு மயக்க முற்றிருக்கும் நான் இளம்பிடியைவிட இழிந்தவளாகி விட்டேன்."

"ஏன் அவ்வாறு கூறுகிருய்?"

"பின் என்ன? மூங்கிலின் முளையைத் தின்ருல் அதன் கொடுமையால் தனது சூல் பிண்டமாகி வழுவும் என்பதை அறிந்தா அப் பெண் யானை அம்முளையைத் தின்றது?"

'இல்லை. பகுத்தறிவில்லாத உயிரினமாமதலால் அறியாமையினல் தான் அதைத் தின்றது. இனனுமொன்று! பெரும்புலர் விடியலில் செங்கதிரோனின் பொன்னிறக் கதிர்கள் படுதலால், கண்ணைப்பிறிக்கும் நிறத்துடன் விளங்கிய ஏற்றிலைக் கொழுமுளையைக் கண்டு ஏமுற்றுத் தான் அதைத் தின்றுவிட்டது என்று கூடக் கூறலாம்."

"நன்ருகச் சொன்னய். அதாவது முளையின் புற அழகைக்கண்டு மயங்கியே அதனைத் தின்றது. அதுவும் பெண்ணினம்தானே! அந்த நிலைதான் எனக்கும். தலைவரது உள்ளத்தழகை நான் நோக்கவில்லை. அகத்தழகை ஆய்ந்துணரவில்லை. புறவழகைக் கண்டவுடனே எனது அறிவு மயக்க முற்றது. பகுத்தறிவுள்ளவளாக இருந்தும், எனது அறிவை அடகுவைத்து விட்டேன். ஆண்மையொன்றையே பெரிதென எண்ணியவர். இடையிலே பிரிந்து இன்னலை விளைவிப்பார் என்று நான் எண்ணவில்லை."

"மலைநாடனின் ஊராரைப்பற்றி மிகைப்பட அன்று சொன்னயே."

ஊராரைக் குறைசொல்ல என்ன இருக்கிறது! தீங்கு செய்தார் மாட்டும் தீயன சொல்லாத இயல்பினர் அவர்கள். தீங்கு செய்தவர்கள் தாமாகத் தமது தவறையுணர்ந்து திருத்திடும் என்று பொறுத்திருப்பவர்கள், ஒறுத்தலை அறியாதவர்கள். அந்த இனத்திலே உதித்தவர்தானே நமது தலைவரும் என்று எண்ணினேன். ஆனல் அவரே நம்மைவிட்டுப் பிரிந்து செல்வதென்ருல், நான் செய்த தீவினை பொறுக்க வொண்ணததா? பாதகஞ் செய்பவரிடத்தும் பண்புடன் நடந்து கொள்ளும் அவர், என்னைவிட்டுப் பிரிந்திருப்பதனுல், நான் செய்த பாதகம் பண்புக்கு ஒவ்வாததா?"

"அப்படி என்ன பாதகம் நீ புரிந்து விட்டாய்?'

"அதைத்தான் நானும் கேட்கிறேன். கொழு முளையைத் தின்ருல், தனது சூல் வழுவுதலால் பின்புதான் சொல்லொணுத் துயருக்கு ஆளாக வேண்டியதிருக்கும் என்பதை அறியாமல் இளம்பிடி தின்று வருந்தியது. ஆனல், நானே அறிவிருந்தும் கடையளாய், தொடர்பு அறுங்கேள்வனை விரும்பினல் பின்பு பலரும் தூற்றும் பழிச்சொல்லுக்கு இலக்காக வேண்டியிருக்கும் என்பதை அறியாது அறிவு மயங்கிச் சென்றுவிட்டு, இன்று தொடர்பு அறுந்த பின்னும் பலரும் அலர்தூற்ற. அதனல் என் பண்புகள் அழிந்தொழியுமோ என்று ஆற்ருெணுத் துயருற்று அல்லும் பகலும் அலைகடல் துரும்பாய்--விலையிலாப் பொருளாய்—பொறிபடு எலியாய்—எறிதிரை நுரையாய் — அனலிடை மெழுகாய்—அனலிடைப் புழுவாய்—பாதகம் புரிந்த வினையாய்-நாதமில்லா வீணையாய் நாளும் நாளும் நான் நலிந்துகொண்டிருக்கிறேன். நாவினல் சுட்ட வடு ஆறுமோ? குறிஞ்சி நல்லூர்ப் பெண்டிர் என் நிலை கண்டாவது இன்னும் என்திறத்து அலர் தூற்றலை ஓவுதல் செய்யாரோ?"

தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்
தாமறிந்து உணர்க என்ப மாதோ
வழுவப் பிண்டம் நாப்பண் ஏமுற்று
இருவெதிர் ஈன்ற ஏற்றிலைக்
கொழுமுளை
சூன்முதிர் மடப்பிடி நாண்மேயல்
ஆரும்
மலைகெழு நாடன் கேண்மை பலவின்
மாச்சினை துறந்த கோள்முதிர்
பெரும்பழம்
விடரளை விழ்ந்துக் காங்குத்
தொடர்பறச்
சேணுஞ் சென்றுக் கன்றே அறியாது
ஏகல் அடுக்கத்து இருண்முகை யிருந்த
குறிஞ்சி நல்லூர்ப் பெண்டிர்
இன்னும் ஓவார் என்திறத்து அலரே.

(நற்றிணை. 116)

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

இளமையிருந்தும் எளிமைக்கோலத்துடன், தன் எழிலுருவுக்கு விளம்பரமும் சுவாசியும்தராமல், பொழில் மணத்துடன் இயற்கையாகத் திகழ்ந்து, இனிய பண்புடனே விளங்குகின்றாள். பிறர் கருத்துக்களைக் கேட்டறிவதில் பொறுமைக் குணமுடையவள்."

"என்ன, சந்திரா, உன்வாழ்வில் துணை கிடைத்துவிட்டது என்பது இதன் பொருளா?"

"என்ன கண்ணா, இது? நல்லவரைப்பற்றிப் போற்றிப் பாராட்டினால், உடனே களங்கப்படுத்துகிறாயே. இது மிகக் கெடுதலானது..."

"இல்லை, சந்திரா. இளமைப் பருவத்தில் எப்போதும் பெம்மைபோல உணர்வின்றியா இருக்கவேண்டும்? துறவியைப்போல வேதாந்தச் செய்திகளையேவா பேசிககொண்டிருக்கவேண்டும்?"

"என்னை அப்படியொன்றும் எண்ணாதே. வாலிப வயதில் வேடிக்கைப்பேச்சு வேண்டத்தகாத ஒன்று அல்ல. அதற்காகக் கண்டதை எண்ணுவதை அவ்வளவையும் நம் வேடிக்கை மனதோடு விளையாட்டாகவே பேசிவிடலாமா?"

"இல்லையே. இழப்பு ஏதாவது உண்டாகும்படி கெடுதல் ஏற்படும்படி பேசினால் தவறுதான், எந்தவித இலாப நட்டமின்றி வேடிக்கை பேசுவதிலே என்ன தவறுள்ளது?"

"ஒன்றுமில்லை, குணவதியைப் பற்றிக் கூற ஆரம்பித்தேன், அதற்குள் உன் வேடிக்கையை ஆரம்பித்துவிட்டாயே. உண்மை நண்பன் நீ ஒருவனே எனக்கு. எனவே தான் கூறவந்தேன்."

"சரி. கேலிசெய்யவில்லை. வேடிக்கையாகத்தானே சொன்னேன். சந்திரா, என்னை உனக்குத் தெரியாதா? உன்னைத்தான் எனக்குத் தெரியாதா? சரி, சொல் மேற்கொண்டு நடந்ததை."

"நடந்தது என்ன உள்ளது? சிற்சில வேளைகளில், கண்ணா, குணவதி என்னைப் பார்க்கின்ற பார்வை பொருள் பொதிந்ததாகப் படுகின்றது. முத்துச் சரம்போன்று கோர்த்துவைத்த சிரிப்பினைச் சிரித்து, என்னைப் பார்க்கும்போது என் மனமும் சஞ்சலமுறுகின்றது. இன்னும், சில வேளைகளில் என்னிடம் பேசும்போது, அம்மொழி கொஞ்சலாக இருப்பதைக் காணுகின்றேன். கிளிமொழியும், கோர்த்த மணிச்சிரிப்பும் என் உள்ளத்தைக் கிள்ளினாலும், நான் 'அந்த' எண்ணத்திற்கெல்லாம் இடங்கொடுப்பதில்லை. அடக்கிவிடுவது என் வழக்கம்."

"சந்திரா, மிக நல்லவள் என்கின்றாய் நீ. நீ சோதிக்க விரும்புகின்றாயா? உன்னைக் காதலிக்கின்றாளா இல்லையா—இதுதானே உன் ஐயம்?"

"கண்ணா, என்ன இது, உன் பேச்சு......"

"என் பேச்சு என்ன கிடக்கின்றது. உன்னை நான் காதலிக்கும்படியா வற்புறுத்துகின்றேன்? குணவதியின் கருத்தையறிந்துகொள். உண்மையில் காதலித்தால், காதலையே வெறுக்கின்ற நீ, சற்று எச்சரிக்கையாய் நடந்துகொள்ளலாம் எனக் கூறவந்தேன்."

"காதலுணர்வுள்ளதா இல்லையா என்பதை அறிந்துகொள்வசெவ்வாறு? அறிந்துகொண்டால், சிறிது தூரமாக இருந்துவிடலாம்."

"சந்திரா, நான் கூறுவதைக் கேள். குணவதியுடன் சில நாட்கள் வரை வேடிக்கையாகப் பேசு. மற்றும் சில நாட்கள் கேலிமொழி கலந்து பேசு. எப்படி வரவேற்கின்றாள் என்பதைப்பார். பிறகோர் நாள் நீ காதலுணர்வைக் குறிப்பான சொற்களால் தெரிவி. பிறகு தெரிந்துவிடுகின்றது. தீர்ந்துவிடும் உன் ஐயம்."

"கண்ணா, இதுவேறு ஏதாவது ஆபத்தை ஏற்படுத்தினால்...?"

"ஒன்றும் ஏற்படாது. சோதனை தானே. நீதான் காதலுக்கு விரோதியாயிற்றே பிறகேன் தன்னம்பிக்கையின்றிப் பேசுகின்றாய்."

சந்திரனின் மனம் சரியான வழியிது இல்லை எனக் கூறினாலும், இளமைப்பருவம் அவனைத் தூண்டியது.

அன்றுமுதல் அவனது பேச்சில், போக்கில் மாறுதல் சிறிது சிறிதாக வளர்ந்தது.

குணவதியின் பேச்சு, அழகு ஒவ்வொன்றையும் அவன் புகழ ஆரம்பித்தான். தன் அன்புக்குரியவன் தன்னைப் புகழ்வதிலே, குணவதி, பெருமையடைந்தாள்; எனினும் நாணுற்றாள்.

"குணவதி! நீ சிரிக்கும்போது, தொடுத்துவைத்த முல்லைச்சரம் போல், உன் வெண்பறகள் எவ்வளவு அழகாக இருக்கின்றது. தெரியுமா? இனிமேல் என் எதிரே அப்படிச் சிரித்து என் மனதைக் கிள்ளாதே"

"குணா, சிற்சிலவேளை உன் இனிய குரலுடன், குயிலும் நாணும் வீணைக் குரலுடன், நீஒருபேச்சுப்பேசினாலும், அது இதய வீணையை மீட்டிவிட்டது போலுணர்கின்றேன். மற்றொரு வேளை நீ ஒரு விரலை வாயில்வைத்துக்கொண்டு, மையுண்ட விழிகளை என்மீது பதியவைத்து, முத்துப் பற்களைச் சிரிப்புத்தேனில் தோயவைத்துக்கொண்டு என்னை நோக்கும் பார்வையிருக்கிறதே, குணா, புகழ்வதற்காகக் கூறுகின்றேன் என எண்ணாதே, உண்மையிலேயே எனது உள்ளம் அப்போதெல்லாம் அலைகள் எழும்பிட, கொந்தளிக்கும் கடலாக மாறிவிடுகின்றது. நீ மனது வைத்தால், குணா, வாழ்வை உருவாக்கலாம்."

"குணா, நான் ஒன்று தரப்போகின்றேன். என்மீது நினக்கு உண்மையிலேயே அன்பின் கவர்ச்சியிருந்தால் அப்பொருளை வாங்கிக்கொள். செம்பவள வாய் திறந்து, சிரித்து ஒரு முத்தினை உதிர்க்காவிட்டாலும், அந்தப் பொருளை வாங்கிக் கொள் அதின் மூலம் உன் உள்ளத்துச் சம்மதத்தைத் தெரிவி. இலையேல் மறுத்துவிடு. ஆம், பெண்மையும் அழகும் மணமும் உள்ள நம் அன்புக் கவர்ச்சியின் சின்னமாக இந்த ரோசா மலர் ஒன்றைப் பெற்று நின் கூந்தலிலே சூடிக்கொள்" என்று கூறி ஒருநாள் சந்திரன் தந்த மலரை, குணவதி கரம்நீண்டி வாங்கி, கண்ணோடு கண்நோக்கி, புன்முறுவல் பூக்கத், தன் கூந்தலிலே செருகிக்கொண்டாள்.

சந்திரன் அழகழகான கதைகள் கூறுவான். வாழ்வின் வரலாறுகளை விளக்கிடுவான். சந்திரனது பேச்சிலே தினந்தினம் தழல்பட்ட வெண்ணெயென மனமுருகிக் கொண்டே வந்தாலும், குணவதி மனம்விட்டு, 'சந்திரா,' 'என் காதல்' நின் மீதுதான்' என்று கூறாமலே யிருந்தாள். சந்திரன் மீது அவளது மனம் கட்டுப்பாட்டையும் மீறிக், காதல் மலரைச் சொரிய ஆரம்பித்தது. ஆனால், அவள் தான் பிறந்துவிட்ட தாழ்ந்த சாதியென்னும் கயிற்றாலும், பெரியவர்களின் தடையென்னும் கட்டுப்பாட்டாலும்,

எதிர்த்துப் போராட வேண்டுமே என்னும் பிணிப்பாலும் தயங்கினுள். மனமமட்டும் தடைகளையுடைத்துக் கொண்டு சென்றுவிட்டது. குணவதி செல்லத் தயாராயில்லை! ஒரு வேளை சந்திரன் அணைத்துக் கொண்டு, எதிர்த்துப் போராட முன் வருவானேயாகில், அவனேடு இணைந்து நின்று போராடத் தனக்கு வலிமை கிடைக்கும் என்று எண்ணினுள். ஆனல் சந்திரனே……

சந்திரனுக்கு அவன் வீட்டில் திருமணம் குறித்துப் பேச்சு நடந்தது. சந்திரன் ஒத்துக்கொள்வதா, மறுத்துவிடுவதா என அலை பாய்ந்து கொண்டிருக்கும்போதே, ஒருநாள் திருமண நாள் குறித்து, அவனுடைய அண்ணனிடமிருந்து கடிதம் வந்துவிட்டது. அண்ணனை மீறி நடக்காத குணத்தினுல், தயங்கினுலும், தடுத்தானில்லை. அவனது தயக்கத்தை அறிந்துகொள்ளாத தமையன், மேற்கொண்டு திருமண நிகழ்ச்சிகளைக் கவனிக்கலானுர்.

நண்பன் சொல்லித் தந்ததை ஒரு சோதனையாகக் குணவதியிடம் பேசிவந்த சந்திரன், குணவதியின் மனம் காதலுணர்வால் தினந்தினம் உருகிக்கொண்டு வருகின்ற நிலையினை நன்குணர்ந்து கொண்டான். சோதனை வைத்த சந்திரன், நாளடைவில் விடையும் எழுத ஆரம்பித்தான். 'காதல்'—இம் மூன்றெழுத்துக்கு இலக்கணம் வகுக்கலானுன். சந்திரன், தன்மனம் தன்னைமீறி, அடக்கினுலும் அடங்காமல் மீண்டும் மீண்டும் குணவதியைச் சுற்றிச் சுழல ஆரம்பித்த நிலையை வேதனையாகவும், சிற்சில வேளை வேடிக்கையாகவும்; மற்றும்பல வேளைகளில் மகிழ்ச்சியுடனும் பார்த்துக் கொண்டு வந்தான். அந்நிலை வளர்ந்துகொண்டே வந்திருந்தால், ஒருவேளை, அந்தக் காதல் முழுமையடைந்து மணம்வீசியிருக்குமோ என்னவோ?

ஒருநாள் சந்திரன் தந்த திருமண அழைப்பிதழைப் பெற்றுக்கொண்ட குணவதி, விழிகளை உயர்த்தி அவனது முகத்தைப் பொருள் பொதிந்த பார்வையோடு நோக்கினுள். சந்திரன் சங்கடமான நிலையோடு, மன்னிக்கும்படி தலையைத் தாழ்த்திக் கொண்டான். இரண்டுசொட்டுக் கண்ணீர்த்துளிகளுடன், "மகிழ்ச்சி சந்திரன், வாழ்க நீவிர்!" என வாழ்த்தி, அவனிரு கரங்களையும் பிடித்துத், தனதுவிழிகளில் அணைத்துக்கொண்டாள். எதையும் கூற முடியாமல், மூச்சடைக்க நின்ற சந்திரனை "சென்று வாருங்கள்! சிறக்க நும் வாழ்வு சீரோடு, பேரோடு!" என வாழ்த்தி வழிகூட்டியனுப்பி வைத்தாள்.

திருமணமானவுடனே, மனைவியின் அன்பு உபசரிப்பிலும், தேன் போன்ற உறவினர்களின் அன்புப் பிணைப்பிலும் மூழ்கிய சந்திரன், தன் வேலைக்கு விலகல் கடிதம் கொடுத்துவிட்டு, சென்னை வந்து சேர்ந்தான்.

தற்செயலாக அன்று சந்திரன் குணவதியைச் சந்தித்தான். அந்தச் சந்திப்பிலே இருவர் இதயங்களும் அதிர்ந்தன. இருவரது விழிகளிலும் நீர் திரையிட்டது. ஏதும் பேசமுடியாமல் அமைதியாகவே நின்று கொண்டிருந்தனர். எதையும் தாங்கிக்கொள்ளும் இதயத்தைப் பெற்றிருந்த குணவதிதான், முதலில் பேச ஆரம்பித்தாள். நலம் விசாரித்தாள். எதற்கும் சந்திரன் தலையைமட்டுமே அசைத்தான். அவளது இனிய குரல் சோக கீதத்தை இசைத்தது. 'வருகின்றேன்' என்ருள். 'குணு, வீட்டிற்கு வா'—இதைச் சொல்லி முடிப்பதற்குள் அவன் நா சுழலப் பட்டபாடு…வார்த்தைகளே வெளி வராமல் திணறின. 'நாளை அவசியம் வருகிறேன்' என முகவரியை வாங்கிக்கொண்டு சென்றுவிட்டாள்.

○

குணவதியை நினைத்துத்தான் விழிகளில் நீரைப் பெருக்கிக் கொண்டு, விம்மிக்கொண்டிருந்தான் சந்திரன். ஏதுமறியாத அவன் மனைவி என்ன காரணமோ எனக் கவலையுற்ருள். நாளை என்னுடைய நண்பர்—என்னுடன் பணியாற்றியவர்—குணவதி என்னும் நல்நங்கை வருவாள் எனமட்டும் சொல்லி வைத்திருந்தான்.

சந்திரன் வீட்டில் எதிர்பார்த்திருந்த குணவதி வந்து சேர்ந்தாள். பூ, பழம் வாங்கிக்கொண்டு வந்த குணவதி, தானிருக்கவேண்டிய இடத்திலிருந்த, சந்திரன் மனைவி உமாவைப் பார்த்தாள். வந்த நீண்ட பெருமூச்சை குணவதி அடக்க முடியவில்லை. வணக்கம் செலுத்தினுள். சந்திரன் இருந்த அறை ஒழித்துவிடப்பட்டிருந்தது. இனிய வரவேற்பைத் தந்த உமா உணவு தயாரிக்கச் சென்றுவிட்டாள். சந்திரனும், குணவதியும் மட்டுமே அறையிலிருந்தனர்.

"குணவதி! இக்கேள்வி கேட்பதற்காக என்னை மன்னித்துவிடு நீ திருமணமே செய்துகொள்ளவில்லையா?"

"சந்திரன்! திருமணமா?"—எனக் குணவதி பெரியதொரு மூச்சு விட்டு, விழிகளில் நீர் சோர விம்மினுள்.

"சந்திரன்! தங்களைச் சந்திக்க வேண்டும் என்று நீண்ட காலமாக எண்ணிய என் எண்ணம் நிறைவேறிவிட்டது. எண்ணம் மட்டும் உறுதியாக இருந்தால், என்றேனும் ஒருநாள் அது நிறைவேறியேவிடுகிறது என்பது உண்மைதான். ஆனல், இந்த முறை ஒருபால் மட்டுமே பொருந்துமென நினைக்கின்றேன். இருபாலும் எண்ணப்பட்டு நிறைவேற வேண்டிய செயலாக இருந்தால், ஒருபால் மட்டும் உறுதியாக இருந்து மற்றொருபால் எண்ணம் உறுதியில்லை என்ருல், அந்த இருபாலும் எண்ணப்பட்டு நிறைவேற வேண்டிய செயல் எங்ஙனம் நிறைவேறும்? சந்திரன், தங்களைக் காணவேண்டும்; தங்களிடத்தில் என் எண்ணங்களை — என் வாழ்வைக் கூறவேண்டும் என நெடுநாள் காத்திருந்தேன். அந்த எண்ணத்தை நிறைவேற்றுவீர்களா?"

"குணு! வாய் குளிரமட்டுமல்ல, நெஞ்சு குளிர 'குணு குணு'—என அழைக்கின்றேனே, என்னை உன்னுல் புரிந்துகொள்ள முடியவில்லையா? நின்னைச் சந்தித்துவிட்டுப் பிரிந்தது முதல் இதுவரை, என்னிதயம் அழுதுகொண்டிருக்கின்ற குரலொலி, நினது இதயச் செவிகட்குக் கேட்கவில்லையா? மனிதன் சிற்சில வேளைகளில் எதிர்காலத்தின் எண்ணமின்றித் தன் சபல ஆசைகளாலும், துடிப்புள்ள அவசரத்தாலும் நிதானத்தையும் நினைவையுமிழக்கின்ற காரணத்தால், வாழ்வில் என்றுமே அனுபவிக்கக்கூடிய தண்டனையைப் பெற்றுவிடுகின்முன். குணு, என்னைத் தவருகப் புரிந்து கொள்ளாதே. குணு, குணு என ஆயிரம் முறை கூறி அழைத்தாலும் என் நெஞ்சு திகட்டாது. குணு என அழைக்க அழைக்க என் வாய் மணக்கின்றது. வாயிலூறும் உமிழ்நீர் இனிக்கின்றது. குணு, என் திருமணம் அப்படிப்பட்ட அவசரப் பட்டஅவசரநிலைதான். பெரியவர்கள் இழுத்த இழுப்பிற்கெல்லாம் நீளும் இரப்பரானேன். அவசரப்பட்டேன். சிந்திக்கும் எண்ணமிழந்ததேன். திருமணம் வாழ்வின் இன்ப

உணர்வை, இதயதாபத்தைக் கணிக்கும் பேறாக மற்றவர் எய்துவர். ஆனால் என் வரை அது ஓர் ஆயுள் கைதியாகத் தண்டனை பெற்று, அனுபவித்து வருகின்றேன். ஆம், குணா, உலகம் துப்புமே என அஞ்சி வாழுகின்றேன். என் மனைவி மிக்க நல்ல பெண். என் காலிற்பட்டால், அவள் தன் கண்ணிற்பட்டால் போலத் துடிப்பாள். என்றாலும் என் இதயம் வறண்டே கிடக்கின்றது. இது ஏன்? எனக்கே விடை சொல்லமுடியாத வாழ்வு நிலை" என்று சந்திரன் கண்ணீர்விட்டான்.

"சந்திரன்! தங்கள் சுந்தரமுகம் என் சிந்தையில் அணையாத ஒளி விளக்காய், அழியாத சிலைவடிவாய் நின்றுவிட்டது. எடுத்த எடுப்பிலேயே இப்படிப் பேசுகின்றேன் என எண்ணாதீர். ஆம், சந்திரன், மனம் எங்கே ஆசைவைக்கின்றதோ, இதயம் எந்தப் பொருளில் இன்பமுளது என எண்ணுகிறதோ, அந்தப் பொருளே அந்த இதயத்துக்கு எல்லாம்! ஆசைப்படுகின்ற இதயம் பெண்ணின் இதயமாக இருந்துவிட்டால்.........பெண் தன் உணர்வை—அன்பை—எண்ணத்தை ஒரே போக்கில்—ஒரே நிலையில்—ஒரே திசையில் செலுத்தப் பழக்கிக்கொண்டவள். எனவேதான் பெண்கள் வாழ்வில் துன்பப்பட வேண்டியுள்ளது. தங்கள் நினைவினைப் பின்னுக்கிக், காலம் எழுதி வைத்த சரித்திரப் பாதையில் செலுத்துவதற்கு மன்னிப்புக் கேட்கின்றேன். ஆசை, வெறுப்பு, காதல், வாழ்க்கை இவையெல்லாம் இன்று எனக்கு மரித்துவிட்ட உணர்வெண்ணங்களாய் அமைந்து, விடுவேற்பட்ட நிலையிலிருக்கும் நான், அவ்வடு ஏற்பட்ட கதையினை மட்டுமே சொல்லவந்திருக்கின்றேன்.

தங்களுடன் ஒரே பள்ளியில் பணியாற்றும் பெரும் பேறுமட்டும் கிடைத்திராவிட்டால், வாழ்வில் இந்த அளவு பெருமையோடு வாழ்வேனா என்பதே ஐயம்தான். என் சொந்த வாழ்வில் நான் ஒரு துன்பச்சுமை! வறட்சியடைந்த நிலம்! தூர்ந்துவிட்ட ஊற்று! ஆனால் என் எண்ணங்கள், உழைப்பு, உணர்வு அத்தனையும் என் நாட்டின் மறுமலர்ச்சிக்கு, மக்களின் பகுத்தறிவு வாழ்விற்கு, வருங்காலக் கண்மணிகளின் வளமான வாழ்விற்குப் 'பொதுத்தொண்டு' என்னும் அத்தியாயம் எதை எதைக் கூறுகின்றதோ, அதையதையெல்லாம் முழுமையாக, என் ஆற்றல் உள்ள வரையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கல்விப் பயிற்சி, மறுமலர்ச்சி, வாழ்க்கைப் பயிற்சி இவற்றைப் புதுமையுலகம் வரவேற்கின்ற நிலையில் அளித்து வருகின்றேன். என் பொருளையும் அதற்காகவே அளித்து வருகின்றேன். நாடு முழுதும் சுற்றிவந்து, இது இதுவே மறுமலர்ச்சிக்கான வாழ்வுத் திட்டங்கள் என்று பரவலாகச் சொல்லும் ஆற்றலைவிட, நாட்டின் ஒரு பகுதியில் நின்று, அவண் மறுமலர்ச்சி வாழ்வுப் பயிற்சிதந்துவரும் தொண்டு மேலானதல்லவா? மேலும், இத்துறை, என் வாழ்வு கண்டு முடிவெடுத்துவிட்ட நிலைக்குப் பரிகாரமாகக்கூட நின்று உதவிபுரிகின்றது. இதில் என் இதயம்,—இழந்துவிட்டது நிம்மதி என ஏங்கிக்கிடந்து சோர்ந்துவிட்ட இதயம் நிறைவு காண்கிறது.

சந்திரன்! தங்களுடன் பணியாற்றிய காலத்து, தாங்கள் கூறியவை அனைத்துமே இன்று என்னை இத்தகு வாழ்க்கையை மேற்கொள்ளும்படி செய்தது. பகுத்தறிவுக் கொள்கைகளினால் புதுமையைத் தந்துவிட்டுச் சென்றதால்தான் இன்று இந்த வாழ்வு வாழ்ந்து வருகின்றேன். தங்களையே என் பொருளாக எண்ணிவிட்ட எனக்குத் தங்களது சீரிய புதுமைக் கருத்துக்களைத் தந்துவிட்டு மறைந்துவிட்டீர்! அன்புகலந்த பார்வையாலும், செய்கையாலும், சொல்லாலும் என்னைத் தாங்கள் உரிமையாக்கிக் கொண்டீர்கள் என இறுமாந்து கிடந்த எனக்கு 'வெறும் கருத்துக் குவியல்'களையே தந்துசென்றீர். கண்ணனைய தங்களது கருத்துக்கள் என்னுடைய நிதியலவோ? எனவே, அவற்றைப் பேணி வருகின்றேன்.

கரத்தினிலே பென்சில் சீவும்போது கத்திபட்டுவிட்ட காரணத்தால் இரத்தப் பெருக்கெடுத்தலைக் கண்டு, பதறித் துடித்து, கைக் குட்டையைக் கிழித்து, விரல்தொட்டுக் கட்டினீர்களே, இதற்காகவே மீண்டும் மீண்டும் வெட்டுப்படாதா என வெறும் மயக்க எண்ணம்கொண்டு, என்மனம் தங்கள்பால் மூழ்கியிருந்த அந்தக்கால நினைவுகள் என்றும் என்னிதயத்துப் பசுமையைப் போர்த்த பருவமாகவே காட்சி தருகின்றது! காலம், உடலை—உணர்வைத் தன் வலிமையான ஆற்றலால் முதுமையெனும் சிறைக்குள்ளேயே பூட்டி அடைத்துவைக்க முடிகிறது. ஆனால், 'காதலை' என்றும் காலம் முதுமைச் சிறையில் அடைத்துவைக்க முடியவில்லை. காலத்தின் முதுமைச் சிறையிலடைபடாத காதலுணர்வுகள் என்றுமே இளமையோடுதானிருக்கின்றன!

தங்களது திருஉருவத்தைப் பதித்துக்கொண்ட என் இதயம் என்றும் அப்படியே இருக்கட்டும் என இருந்துவிட்டேன். தங்களையே எப்போதும் சுற்றிவந்த என் மனத்தை மீட்டு வேறு திசையில் ஓட்டிட நான் விரும்பவில்லை. இருப்பது ஓர் இதயம்; ஒரு மனம். அங்கே இருக்கவேண்டுவதும் ஓர் உருவம்தான்; ஓர் எண்ணம்தான்; அது தாங்களாக அமைந்துவிட்ட பிறகு நானென்ன செய்வது, என வெறுமனேயிருந்துவிட்டேன். வேறுருவத்தைப் பதித்துவிடு; வேறு எண்ணத்தைக் கொண்டுவிடு என உற்றார், உறவினர், நண்பர்—ஏன், உமக்கு விளையாட்டாகக் கிண்டல் செய்யக் கற்றுத்தந்த உமது நண்பர் கூடகண்ணீர்விட்டும், கனிந்துரைத்தும், பரிவுகாட்டியும், பாசமூட்டியும், பற்பல நிலைகளிலுரைத்தனர். என் மனம் அவ்வளவையும் மறுத்துவிட்டது. என் அன்னையார் இதே கவலையுணர்வால் இறந்துவிட்டார். என் காதலுணர்வைக் கலைத்துவிட வந்த அத்தனைபேர் மத்தியிலும், நிலைகுலையாமல் நின்றேன். என உறுதிகண்ட அத்தனைபேரும் நழுவிவிட்டனர். உலகத்தார் கண்கட்கு நான் திருமணமாகாத பாவை. ஆனால், எனக்கு நான் தங்களை என் இதயத்தே விளக்கேற்றிவைத்த கோயிலாகக் கட்டியிருக்கின்றேன். இந்நிலையில், என்றோ 'திருமணமான பாவையே நான். எனவேதான், தனிமையோ அல்லது வாழ்வில் நான்

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

சந்திக்க நேர்ந்த துயர்களத்தனையும் எனக்குச் சர்வ சாதாரணமாகத் தோன்றின!

தங்கள் திரு உருவத்தைக் காண வேண்டும்; தங்களோடு தங்களுடையவளாக அன்றிருந்த பயந்து ஒதுங்கியிருந்து வாழ்ந்த குணவதியாக இராமல், உரிமை படைத்த குணவதியாக உரையாடவேண்டும் எனும் எண்ணம் நீண்ட நாட்களாகவே எனது இதயத்தின் தீராத் தாகமாக இருந்து வந்தது. நான் கொடுத்துவைத்தவள்! என் எண்ணமும் இவ்வளவு விரைவில் நிறைவேறிவிட்டது.

சந்திரன்! ஏன் அழுகின்றீர்கள்? உங்கள் குணவதியைப்பாருங்கள். எவ்வளவு உறுதியாக உங்களோடு உரையாடிக் கொண்டிருக்கின்றாள்! வாழ்வின் அரும்பு கண்ட நிலை அன்று நமக்கு. எனவேதான் இயற்கையின் செயல்களை அந்தப் போக்கிலேயே விட்டுவிட்டேன். அனுபவம் என்ற மலர்ச்சியைப் பெற்றவர் அத்தனைபேரும் இயற்கையின் செயல்கட்கு, தான்தோன்றித் தனமான போக்கிற்குத் தடை விதிக்கின்றனர்; வெற்றியும் காண்பவருண்டு. ஆனால், நாமோ அனுபவ மலர்ச்சியடையா அரும்புப் பருவத்தில், வெறும் மனத்தை மட்டும் தேக்கிவைத்துக் கொண்டு நின்றோம். என் செய்வது? இப்போது மட்டும் என்ன? தங்களுடையவள்தானே நான். மலரைச் சூட வேண்டியது கூந்தல்தான். அந்தக் கூந்தல் அடுத்தவளுடையதாக இருந்தாலும், அங்கேயும்அழகு ஒளி தரவில்லையா? தங்களது இன்ப நிலையே, அமைதி வாழ்வே என்னுடைய இன்பமும்அமைதியுமாகும். நான் செல்லவேண்டும். எனது சகோதரி — உங்கள் துணைவியைக் கூப்பிடுங்கள். சொல்லிவிட்டுச் செல்கின்றேன்.''

"குணவதி! முடியாத உன் கதையை முடித்துவிட்டாய். முடிந்துவிட்ட என் கதையின் முற்றுப் புள்ளியைக் காற்புள்ளியாக்கிவிட்டுச் செல்கின்றாய். கண்ணீர் ஒன்றனை மட்டும் விடுகின்ற நிலையினனாக இருக்கின்றேன். எவ்வளவு பெரிய 'தியாகம்' செய்துகொண்டு, நீ, எவ்வளவு அடக்கத்தோடு என் எதிரே நிற்கின்றாய்! தியாகத்திற்குச் சிறிதும் தகுதியற்ற நான் என்ன பரிசை நல்கப் போகின்றேன்? நின் தியாகத்திற்கு வெறும் பரிசை நல்கி, அத்தியாகத்தினைக் கறைப்படுத்த மாட்டேன். என்னிதயம் கனிந்துருகுகின்ற, உன் காதலன் — உன்னிதயத்தே கோயில் கொண்டவன் விடும் கண்ணீர் காலங் கடந்துவிட்ட கதைக்காக, இயற்கையின் வலிய செயல்கட்குப் பலியாகிச் சிதைந்துவிட்ட ஒரு ஓவிய வாழ்வுக்காகக் குற்றவாளியாகி வடிக்கின்ற கண்ணீரையே என்றும் தரக்கூடிய 'வெறும் மனிதக்கூடாக' விளங்குகின்றேன். என் உயிரால் நின்னுடைய இந்த மாபெரும் தியாகத்திற்கு ஈடுகொடுக்க முடியுமாயின், இப்போதே தரத் தயங்கேன்.''

"சந்திரன்! இந்த உரைகளெல்லாம் எதற்குப் பயன்? காலங் கடந்த கதையாகிவிட்ட நம்நிலைக்கு உணர்வும் உயிரும் கொடுத்து என்ன பயன்? கதையைக் கதையாகவே படித்துப் பார்ப்போம். ஏன் கலங்குகின்றீர்கள். அமைதியோடிருங்கள். சந்திரன், எனது வாழ்வு தியாக வாழ்வல்ல. பெண்மையின் இலக்கணப் பண்பையே நான் காட்டியதாக உணர்கின்றேன். அப்படியே மற்றவர் எண்ணிவிட்டாலும், என் மனச்சான்று காண்பித்த இந்த வழியால், யாருக்கும் எதற்காகவும் எந்த வகையிலும் இழப்பொன்றுமில்லையாதலால், இப்படியே வாழுகின்றேன். தங்கள் உயிர்கொண்டு ஈடு செய்ய எண்ணுகின்றீர்? சந்திரன் மீண்டுமொருமுறை மனதால்கூட எண்ணாதீர் அவ்வாறு. என் இதயத்தை உறைவிடமாக்கிக்கொண்டீர் இப்போது வேறொரு இதயத்தின் உறைவிடமாகிவிட்டீர். அதை மறவாதீர். மறக்கக் கூடாது. நான் சென்று வருகின்றேன்'' — எனக் கூறிக்கொண்டே குணவதி வெளியே நடந்தாள். கண்ணீர் விட்டுக் கொண்டு நின்ற சந்திரன், நீண்ட பெருமூச்சுடன், அவள் நடந்த வழியைப் பார்த்தபடி நின்று கொண்டேயிருந்தான்.

★

## விற்பனையாளர்கட்கு:

அதிக இதழ் தேவைப்படுவோர் புதன் கிழமைக்குள் தெரியப்படுத்தவும்.

❀

## சந்தாதாரர்கட்கு:

சந்தா முடிந்தவுடன் சந்தாவைப் புதுப்பிக்கும் சந்தாதாரர்கள் சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகி.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.